இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

ஆகஸ்ட் 2021 August | இதழ் 367 ISSUE




# தமிழர் தகவல்

TAMILS' INFORMATION

ESTD From The Community To The Community 1991

Premier Canadian Tamil Journal

## மாதாந்த படைப்பாளிகள்



Monthly Contributors

சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி ஸ்தாபிதம் -1991

31 வது ஆண்டில் st Year

Growing with the Community ESTD-1991

ஆசிரியரிடமிருந்து... *From the Editor*


தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

**தொலைபேசி:**
416 920 9250

**மின்னஞ்சல்**
tamilsinfo@sympatico.ca

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

**வெளியீடு**
அகிலன் அசோஷியேற்ஸ்

**முதன்மை ஆசிரியர்**
திரு எஸ். திருச்செல்வம்

**இணை ஆசிரியர்**
றஞ்சி திரு

**உதவி ஆசிரியர் &**
**தயாரிப்பு முகாமையாளர்**
சசி பத்மநாதன்

**உதவி ஆசிரியர்கள்**
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

**பொது முகாமையாளர்**
ஆர். ஆர். ராஜ்குமார்

**பொதுமக்கள் தொடர்பு**
என். விமலநாதன்
என். குமரதாசன்
இ. சிவலிங்கம்
வே. விவேகானந்தன்
ப. சிவசுப்பிரமணியம்

**தொழில்நுட்ப உதவி**
ஹரன்கிறாஃப்

**மாதாந்தம்**
5000 பிரதிகள்

**ஆண்டு மலர்**
6000 பிரதிகள்

**இணையம்**
www.tamilsinformation.info


# மற்றொரு புள்ளி

கனடாவில் ஈழத்தமிழரின் வாழ்வும் வரலாறும் அரை நூற்றாண்டை நோக்கி நகர்கிறது. வந்தேறு குடிகளான தமிழினம் கனடிய மைய நீரோட்டத்தில் தன்னை வேகமாக இணைத்துக் கொண்டுள்ளது.

இலங்கையில் 1983 யூலையில் இடம்பெற்ற படுகொலையை அடுத்து எம்மவர்க்காக கனடா தனது கதவை அகலத் திறந்தது. 1987ல் இந்திய ராணுவத்தின் தாயக நுழைவும், அடுத்தடுத்து வந்த சிங்கள பௌத்த ஆட்சி மாற்றங்களும் மேலும் பல்லாயிரக்கணக்கானவர்களை இந்த மண்ணில் குடியேற வைத்தது.

இன்று சுமார் மூன்று லட்சம் வரையான ஈழத்தமிழர் கனடாவில் வாழ்வதற்கு இந்த நாட்டு அரசாங்கங்களினதும் மக்களினதும் தாராள மனப்பான்மை - யும், மனிதாபிமான உணர்வுமே முதன்மைக் காரணம். கனடா இப்போது எங்களுக்கு செவிலித் தாயாகியுள்ளது.

கல்வி, வணிகம், அரசியல் பங்களிப்பு, பொருளாதார வளம் ஆகியவற்றில் எம்மவர் காட்டிய, தொடர்ந்து காட்டிவரும் சவால் நிறைந்த ஈடுபாடு பல வெற்றிகளைத் தந்துள்ளது. கனடிய மத்திய, மாகாண, மாநகர ஆட்சி அரசமைப்புகளில் ஈழத்தமிழர் பிரதிநிதிகள் இன்று இடம்பெற்றுள்ளனர்.

இந்நாட்டின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் எம்மவர் காட்டிவரும் அக்கறையை, கறுப்பு யூலை ஆண்டு நினைவையொட்டி கடந்த மாதம் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ விடுத்த செய்தியிலும் மறவாது குறிப்பிட்டிருந்தார்.

ஆரம்பத்தில் அகதிச் சமூகமாக அடையாளம் காணப்பட்ட நாம் இன்று கனடியத் தமிழராகியுள்ளோம். எம்மவரின் தொடர்ச்சியான சமூக அரசியல் ஈடுபாடு எமது நீண்டகால தேவைகளை நிறைவேற்ற உதவி வருகிறது.

தமிழினப் படுகொலையை சில உள்ளூராட்சிச் சபைகள் ஏற்றுக் கொண்டமை, தமிழ் மரபுரிமைத் திங்கள் சட்டமாகியமை, முள்ளிவாய்க்கால் மாதத்தை கல்வி அறிவூட்டல் வாரமாக சட்டமாக்கியமை, ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை உருவாக்கியமை என்பவை விரல் விட்டுச் சொல்லக்கூடியவை.

இந்தப் பட்டியலில் அடுத்த கட்டமாக ரொறன்ரோவில் தமிழர் சமூக மையம் அமைக்க எடுத்த முயற்சிக்கு கனடிய மத்திய மற்றும் ஒன்ராறியோ மாகாண அரசுகள் 26.3 மில்லியன் டாலர்களை வழங்கியுள்ளன. ரொறன்ரோ நகரசபை 25 மில்லியன் டாலர் பெறுமதியான காணியை வழங்கி ஊக்குவித்துள்ளது.

நாம் தமிழர் எங்கு வாழ்ந்தாலும் ஒன்றிணைந்து ஒரு குரலில் ஓரணியாக நின்றால் எதனையும் சாதிக்கலாம் என்பதற்கு, நீண்டகாலக் கனவாக இருந்த தமிழர் சமூக மையத்தை நிர்மாணிப்பதற்கு கிடைத்துள்ள அரச உதவிகள் நல்லதொரு உதாரணம்.

'கனவு காணுங்கள்' என பாரதத்தின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் கூறியது இங்கே நனவாகிறது.

எம்மவரின் ஏறுபடியில் இது மற்றொரு வெற்றிப் புள்ளி.

**திரு எஸ். திருச்செல்வம்**


தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

Tel: 416 920 9250

**E-mail**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

**General Manager**
R. R. Rajkumar

**Public Relation**
N. Vimalanathan
N. Kumaradasan
R. Sivalingam
V. Vivekananthan
P. Sivasubramaniam

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies

**Website**
www.tamilsinformation.info

# சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் கனடாவின் முப்பதாவது ஆளுநர் நாயகம் மேரி சைமன்



கனடாவின் முப்பதாவது ஆளுநர் நாயகமாக (கவர்னர் ஜெனரல்) மேரி ஜெனி மே சைமன் (73 வயது) பதவியேற்றுள்ளார். பிரித்தானிய மகாராணியின் பிரதிநிதியாக பிரதமர் ஜஸ்ரின் ரூடோவின் சிபார்சில் கடந்த மாதம் 26ம் திகதி இவரது பதவியேற்பு இடம்பெற்றது.

ஒலிபரப்பாளராக, நிகழ்ச்சித் தயாரிப்பாளராக, வெளிவிவகார அரச அலுவலராக, டென்மார்க்கின் கனடியத் தூதுவராக எனப் பன்முக அனுபவஸ்தரான இவர், ஆளுநர் நாயகமாக நியமனம் பெற்றுள்ள முதலாவது கனடிய முதற்குடியினரைச் சேர்ந்தவர். கியுபெக்கின் நுனாவக்வில் பிறந்த மேரி சைமன் 1994-2004 காலப்பகுதியில் சேர்கும்பொலர் விவகாரத்தில் தூதராகச் செயற்பட்டதோடு சார்ளற்ரவுண் ஒப்பந்தத்திலும் பிரதான பங்கு வகித்தவர்.

கனடிய - ஐரோப்பிய தம்பதியரின் எட்டுப் பிள்ளைகளில் இரண்டாவதாகப் பிறந்த மேரி சைமனின் கணவர் வைற் ஃபிரேசர் ஊடகவியலாளரும் நூலாசிரியருமாவார். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

ஆங்கிலத்திலும், பூர்வீக மொழியான இனுயுகிரற் மொழியிலும் புலமைமிக்க மேரி சைமன், கனடிய உத்தியோகபூர்வ மொழிகளில் ஒன்றான பிரெஞ்சு தெரியாதிருக்கும் குறை இப்போது பரவலாக கூறப்படுகிறது. கனடிய உத்தியோக மொழித் திணைக்களத்துக்கு இது தொடர்பாக சுமார் நானூறுக்கும் அதிகமான புகார்கள் எழுத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.■

# மனிதாபிமான, கருணை அடிப்படை நிரந்தர வதிவிட விண்ணப்பங்கள் நிராகரிப்பு அதிகரிப்பு !

## Refusal rate for immigration on humanitarian and compassionate grounds rising!

**The rejection rate for permanent residency applications on humanitarian and compassionate grounds has risen sharply over the past couple of years, according to recently released figures.The rate of applications refused after processing ranged from 35 to 41 per cent between 2016 and 2019. In 2020, the rejection rate rose to 57 per cent, even though the total number of applications processed — 7,835 — increased by just 11 per cent. The 2021 figures, which only include up to Feb. 28, show the rate of applications refused climbed to 70 per cent of the 4,180 processed in the first two months of this year.**

கனடிய நிரந்தர வதிவிட உரிமைக்கு (Permanent Residency) மனிதாபிமான கருணை அடிப்படையில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக குடிவரவு திணைக்கள புள்ளிவிபரம் தெரிவிக்கிறது.

கனடாவில் வழமையான நடைமுறையின் கீழ் நிரந்தர வதிவிட உரிமைக்கு விண்ணப்பிக்க முடியாதவர்கள் (அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள், உள்நாட்டு ஸ்பொன்சர் நிராகரிக்கப்பட்டவர்கள் போன்றோர்) மனிதாபிமான கருணை அடிப்படையில் விண்ணப்பிக்க முடியும். இவ்வாறு விண்ணப்பித்த ஆயிரக்கணக்கானவர்களின் விண்ணப்பங்கள் ஏற்கனவே ஏற்கப்பட்டு அவர்கள் கனடியப் பிரஜாவுரிமையும் பெற்று இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

2016ம் ஆண்டுக்கும் 2019ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இவ்வாறு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 35-49 வீதமாக இருந்தது. 2020ம் ஆண்டில் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட 7835 விண்ணப்பங்களில் 57 வீதமானவை நிராகரிக்கப்பட்டன.

ஆனால், இந்த வருடத்தின் முதல் இரு மாதங்களில் (ஜனவரி 01 முதல் பெப்ரவரி 28வரை) மட்டும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட 4180 விண்ணப்பங்களில் 70 வீதமானவை நிராகரிக்கப்பட்டுள்ளதானது சட்டவாளர்கள், துறைசார் சமூக அமைப்புகளுக்கு அதிர்ச்சியளித்துள்ளது. மேற்குறிப்பிட்ட இரண்டு மாதங்களிலும் மொத்த வேலை நாட்கள் நாற்பது மட்டுமே. இந்த நாற்பது நாட்களில் 4180 விண்ணப்பங்கள் எவ்வாறு பரிசீலிக்கப்பட்டு முடிவு காணப்பட்டன என்பதே அதிர்ச்சிக்கான முக்கிய காரணம்.

இது தவிர நிரந்தர வதிவிட உரிமைக்கு விண்ணப்பித்த பலர் தங்கள் விண்ணப்பங்களை மீளப் பெற்றுக்கொண்டதும் தெரியவந்துள்ளது. தங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாமென்ற அச்சம் காரணமாகவே இவ்வாறு மீளப்பட்டிருக்கலாமென கருதப்படுகிறது. இவர்கள் தாமாக நாட்டை விட்டு சென்றிருக்கலாம் அல்லது இடம்மாறி வாழும் நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கலாமென கூறப்படுகிறது.

சட்ட முறைப்படி பதிவு செய்யப்படாது கனடாவில் தொழில் புரியும் பலருக்கு இங்கு நிரந்தரக் குடியுரிமை பெற மனிதாபிமான கருணை அடிப்படையே ஒரே வழியெனவும், அது நிராகரிக்கப்படும் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் Migrant Workers Alliance for Change என்னும் கனடிய அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் முடிவு மூடப்பட்ட கதவுகளின் பின்னால் எடுக்கப்படுகிறது என்றும், இது சம்பந்தமாக பகிரங்கப் பொறுப்புக்கூறல் இல்லாதுள்ளது என்றும் கனடிய என்.டி.பி. கட்சியின் குடிவரவு விமர்சகர் ஜெனி குவான் தெரிவித்துள்ளார்.

முக்கியமாக, கொரோனா பேரிடர் காலத்தில் வெளிநாட்டவர்களை கூடுதலாக கனடாவில் உள்வாங்க பல அறிவிப்புகளை குடிவரவு அமைச்சு வெளியிட்டு வரும் வேளையில், ஏற்கனவே உள்நாட்டில் வசிப்பவர்களுக்கு மனிதாபிமான கருணை அடிப்படையில்கூட நிரந்தரக் குடியுரிமை மறுக்கப்படுவது கனடிய அரசின் முன்னுக்குப் பின் முரணான கொள்கையை அம்பலப்படுத்துகிறது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.



“என்ன நடைபெறுகிறது என்று தெரியவில்லை. ஏன் இவ்வாறு நடைபெறுகின்றது என்று தெரியவில்லை. சட்டத்தில் எந்தக் கொள்கை மாற்றமும் இடம்பெறவில்லை. பகிரங்க அறிவிப்பு எதுவும் வெளிவரவில்லை. ஆனால் நிராகரிப்பு அதிகரிக்கிறது. இது பற்றி கனடிய அரசு தெளிவுபடுத்த வேண்டும்” என சட்டவாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.■

எஸ்தி



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

திருமண வைபவத்தின்போது மணமகன் பெண் போலவும், மணமகள் ஆண் போலவும் வேடமணிந்து விநோதமாக சடங்கு செய்வது இந்தியாவின் ஆந்திர மாநிலத்திலுள்ள பிகாசம் என்ற சமூகத்தவரிடம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. அங்கலம்மா மற்றும் போலரம்மா என்னும் தேவதைகளின் கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்வதற்கு இந்த வேடம் கட்டாயம் என்றும், இதனால் தம்பதியர் வாழ்க்கை நீண்ட காலம் மகிழ்ச்சியாக அமையுமென்றும் இவர்கள் கருதுகின்றனர். திருமணத்தின் பின்னர் பாரம்பரிய முறைப்படி வன்னி மரத்துக்கும் நாக புற்றுக்கும் பூசை வழிபாடுகள் செய்த பின்னரே மணமக்களுக்கும் அழைக்கப்பட்டவர்களுக்கும் விருந்துபசாரம் நடைபெறுகிறது.

கொரோனா பேரிடர் ஆரம்பித்ததைத் தொடர்ந்து வெளி நடமாட்ட முடக்கம் உலகெங்கும் நடைமுறைக்கு வந்ததால், இக்காலத்தில் அநேக குழந்தைகள் பிறக்கலாமென பல நாடுகளும் எதிர்பார்த்தன. ஆனால் ஏனோ தெரியாது அவ்வாறு பிள்ளைகள் பெருமளவில் பிறக்கவில்லை. சிலவேளைகளில் இனிமேல்தான் அநேக பிரசவங்கள் இடம்பெறலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. கொரோனாக் காலத்தில் பிறந்த சில பிள்ளைகளுக்கு Hope, Joy, Patience, Rainbow, Phoenix (நம்பிக்கை, மகிழ்ச்சி, பொறுமை, வானவில், நெருப்பிலிருந்து மீழெழுதல்) போன்ற காரணப் பெயர்கள் சூட்டப்பட்டதை விநோதமானதும் அர்த்தமுள்ளதுமான பெயர்கள் என்று ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க முன்னைய ஜனாதிபதி ட்ரம்ப் அறிமுகப்படுத்திய வெளிநாட்டினருக்கு விசா வழங்கும் கொள்கை மாற்றம் காரணமாக வழமையாக அங்கு செல்லும் இந்திய பல்துறைசார் அறிவுஜீவிகள் இப்போது கனடா நோக்கிப் பயணிக்க ஆரம்பித்துள்ளனர். வருடம் ஒன்றுக்கு ஒரு லட்சம் வரையான குடிவரவு விசாக்களை அமெரிக்கா நிராகரித்து வருகிறது. அதேசமயம் கனடிய விசா வழங்கும் கொள்கை உலகின் திறமைசாலிகளை உள்வாங்குவதில் முக்கியத்துவம் காட்டுவதால் இந்திய அறிவுஜீவிகள் இப்போது தங்கள் பார்வையை கனடாவின் பக்கம் திருப்பியுள்ளதாக புலம்பெயர் நிபுணர்கள் ஆய்வு மையம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மின்காந்த விசையை பயன்படுத்தி ஒரு மணித்தியாலத்தில் 600 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடிய உலகின் அதிவேக ரயில் வண்டியை சீனா கடந்த மாதம் 20ம் திகதி பாவனைக்குட்படுத்தியது. கடந்த சுமார் இருபது ஆண்டுகளாக இந்த ரயில் வண்டி குறுகிய தூரங்களுக்கு ஓடவிட்டு பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. பெய்ஜிங்கிலிருந்து சாங்காய் வரையான 1300 கிலோமீற்றர் தூரத்தை இரண்டரை மணிநேரத்தில் இந்த ரயில் வண்டி சென்றடைகிறது. இவ்விரு நகரங்களுக்குமிடையிலான விமானப் பயணம் மூன்று மணி நேரமாகும். இந்த அதிவேக ரயில் சேவையை சீனாவின் மேலும் ஏழு நகரங்களுக்கிடையில் இவ்வாண்டு இறுதிக்குள் அறிமுகம் செய்ய ஏற்பாடாகி வருகிறது.

காலத்துடன் சேர்ந்து வாழ்வோம் என்ற கூற்றை நிரூபிக்கும் வகையிலான திருமண நிகழ்வொன்று கடந்த மாதம் இங்கிலாந்தில் இடம்பெற்றது. இங்குள்ள பிரபல ஆடை வடிவமைப்பாளரான ரொம் சில்வர்லூ என்பவர் திருமணப் பெண் ஒருவருக்கு 1500 முகக் கவசங்களைப் (Face mask) பயன்படுத்தி, வெண்ணிறத்திலான திருமண ஆடையைத் தயாரித்து வழங்கி உள்நாட்டு ஊடகங்களில் பிரபல்யமாகியுள்ளார். ஜெமிமா ஹாம்ப்றோ என்னும் பெயருடைய மணப்பெண் இந்த ஆடையை அணிந்து தேவாலயத்துக்குச் சென்று பலரது கவனத்தையும் ஈர்ந்ததுடன், கின்னஸ் பதிவுக்கும் அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# டன்டாஸ் வீதி டன்டாஸ் சதுக்கம் டன்டாஸ் சப்வே

## மூன்று பெயர்களையும் அகற்ற முடிவு

ரொறன்ரோ நகரசபை நிர்வாகத்துள் நீண்டகாலமாக புகழ் பெற்றிருக்கும் டன்டாஸ் பெயரைத் தாங்கிய வீதி, சதுக்கம், சப்வே (நிலக்கீழ் ரயில் நிலையம்) ஆகியவற்றின் பெயர்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக புதிய பெயர்களைச் சூட்ட ரொறன்ரோ நகரசபை தீர்மானித்துள்ளது. சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஹென்றி டன்டாஸ் என்பவருக்கு மதிப்பளிக்கும் வகையில் இப்பெயர்கள் சூட்டப்பட்டன.

இவர் அடிமை வியாபாரத்துடன் தொடர்பானவர் என்றும், அதனை இல்லாமற் செய்ய திட்டமிட்டு தாமதம் காட்டினார் என்றும் இவர் மீது அண்மையில் குற்றஞ்சாட்டப்பட்டது. பூர்வீகக் குடி சிறார்களின் எச்சங்கள் கனடாவில் பல வதிவிடப் பாடசாலை காணிகளில் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, கனடிய முதலாவது பிரதமர் சேர். ஜோன் மக்டொனால்ட், றையர்சன் போன்றோரின் பெயருடன் டன்டாஸின் பெயரும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. பல இடங்களில் இவர்களின் சிலைகள் பொதுமக்களால் அகற்றப்பட்டு வருகின்றன. டன்டாஸ் பெயருக்குப் பதிலாக புதிய பெயர்களைத் தீர்மானிக்க ஆறு மாதங்களாவது செல்லுமென நகரசபை தெரிவித்துள்ளது.

# கனடாவில் விரைவில் தேர்தல் நடைபெற்றால் பேரிடர் அதிகரிக்கும்?

கனடாவுக்கான பொதுத்தேர்தல் இரண்டு வருடங்கள் முற்கூட்டி இவ்வருட இறுதிக்குள் இடம்பெறலாமென சகல எதிர்க்கட்சிகளும் எதிர்பார்க்கின்றன. எந்த வேளையிலும் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு ஆளுநர் நாயகத்தைக் கோரலாமென தெரிய வந்துள்ளது. கொரோனா பேரிடரையொட்டி பொதுமக்களுக்கும் வணிக நிறுவனங்களுக்கும் தாராளமாக வழங்கப்பட்ட நிவாரணத்தைச் சாதகமாக்கி பிரதமர் தேர்தலை முற்கூட்டி நடத்த முனைவதாக அரசியல் கட்சிகளும் அரசியல் விமர்சகர்களும் தெரிவித்து வருகின்றனர். மறுபுறத்தில், தேர்தலானது மக்களைத் திசை திருப்பி கொரோனா பரவலை அதிகரிக்கச் செய்யலாமென கருத்துக் கணிப்பொன்று தெரிவித்துள்ளது.



பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன்

# பரவிவரும் காட்டுத்தீயும் கருகிவரும் எதிர்காலமும்

## ஊரும் உலகும் - 1

இவ்வாண்டு ஜூலை முதல் நாள் கனடா தினம் ஏனைய ஆண்டுகளைப் போலல்லாது சற்று பொலிவிழந்ததாகவே அனுஷ்டிக் - கப்பட்டது. வதிவுப் பள்ளிகளில் இறந்த பூர்வீக கனடிய சிறுவர்களின் துயர்நினைவாக தலைநகர் ஒட்டாவாவில் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறந்தது.

கனடாவில் அன்றைய தினம் அதிகம் பேசப்பட்ட விடயம், இந்நாட்டின் மிகமூத்த குடிகளின், பத்தாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த லிட்டன் எனும் பெயர் கொண்ட கிராமம் முதல்நாள் இரவு வெப்ப அலைகளால் மூண்ட தீயினில் வெந்து அழிந்த சோகச் செய்திதான்.

பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலத்தின் தெற்குப்புறமாகவுள்ள இச்சிறிய கிராமத்தின் வெப்பநிலை ஜூன் மாத முடிவில் தீவிரமாக உயரத்து - வங்கி ஜூன் இறுதிநாளில் 50 பாகையை எட்டி, கனடாவில் இதுவரை பதிவான மிக உயர்ந்த வெப்பநிலைக்கான சாதனையை முறியடித்தது. கனடாவின் வெப்பத் தடம் (hot spot) எனும் பட்டப் பெயர் பூண்ட இந்நிலம் வெப்பத்தில் வெந்து கருகியது.

250 குடிமக்களை மட்டுமே கொண்ட அக்கிராமத்திற்கு அண்மையில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட கனடிய பூர்வீக குடிமக்கள் வாழ்கின்ற - னர். அன்றைய அகோரவெப்பம் அக்கிராமத்தின் மண்ணையும் மரங்களையும் இரண்டு மனிதரையும், விலங்குகள், வீடுகளையும் அடையாளம் காண முடியாத வகையில் தீக்கிரையாக்கியது.

இதைத்தொடர்ந்து வெப்ப அலைகள், உலக வெப்பமயமாதல், கால-நிலை மாற்றங்கள் பற்றிய ஏக்கம் நிறைந்த புதிய விழிப்புணர்வும், காரசாரமான வாதப் பிரதிவாதங்ககள் பல பல்கலைக் கழகங்கள் முதல் பன்னாட்டு நிறுவனங்கள் வரை, மாநில அரசுகள் துவக்கம் மத்திய அரசவைகள் ஈறாக இன்னும் இடம் பெறுகின்றன.

இந்த தீயழிவு பற்றிக் கருத்துத் தெரிவித்த பிரிட்டிஷ் கொலம்பியாவின் சைமன் ஃப்ரேசர் பல்கலைக்கழகத்தின் முன்னாள் புவியறிவியல் பேராசிரியர் ஜோன் கிளேக் "இவ்வகை - யிலான பெருவெப்பம் உதிரியான ஒன்று எனக் கருதமுடியாது, காலநிலை மாற்றங்களின் ஒரு முக்கிய முன்னறிவிப்பாகவே இது உணரப்பட வேண்டும் எனவும் நாங்கள் இப்போது மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் இருக்கிறோம்" என்றும் மிகக் கரிசனையோடு தெரிவித்தார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் லிட்டன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த குக்கிராமம். பூர்வீக குடிகள் தவிர, ஐரோப்பிய குடிவரவாளர், தங்கச் சுரங்கத் தொழிலாளர்கள், சீன தொடர்வண்டித் தொழிலாளர் என பல்லினத்தவரும் பகுத்துண்டு பலவாண்டு வாழ்ந்த பெருமண். மூன்று சிறு-பெரு நதிகள் அங்கே சங்கமிப்பதால் அதன் பூர்வீக பெயர் காம்சின், கும்ஷீன் - அதாவது நதிகளின் சங்கமம் என அழைக்கப்பட்டது. 1858இல் நாவலாசிரியரும் பிரித்தானிய காலனித்துவ அரசின் செயலாளருமான எட்வர்ட் லிட்டன் நினைவாக புதிய பெயர் சூட்டப்பட்டது.

ஜூன் 30 முதல் ஜூலை 1 வரை இந்த பகுதியில் 700,000க்கும் மேற்பட்ட மின்னல் தாக்குதல்கள் ஏற்பட்டதாக வானிலை ஆய்வாளர் கிறிஸ் வாகாஸ்கி தெரிவித்தார். இந்த ஒரு வாரம் மட்டும் பிரிட்டிஷ் கொலம்பியாவில் 180க்கும் மேற்பட்ட காட்டுத்தீயை எதிர்த்துப் போரா - டும் சூழல் உருவானது. பிரிட்டிஷ் கொலம்பிய அரசின் கூற்றுப்படி, 70 வீத எரிவுகள் இடி-மின்னல் தாக்குதல்களால் ஏற்பட்டவை.

பசிபிக் பிராந்தியத்தின் வடமேற்கில் நூற்றுக்கணக்கானவர்கள் இறந்ததாக செய்தியுண்டு. பிரிட்டிஷ் கொலம்பியாவில் இந்த வெப்பஎழுச்சிப் பேரழிவின் விளைவாக 486 திடீர் மரணங்கள் பதிவாகியுள்ளன. அமெரிக்காவின் சியாட்டில் மாநகரில் வெப்பம் தொடர்பான காரணங்களால் குறைந்தது 16 பேர் இறந்தனர்.

போர்ட்லேண்டை உள்ளடக்கிய ஒரேகான் பகுதியில் அதிக வெப்பத் - தின் காரணமாக 44 பேர் இறந்ததாக மருத்துவர் ஒருவர் குறிப்பிட்டார்.

இறந்தவர்கள் 44 முதல் 97 வயது வரையானவர்கள். இவர்களுள் 17 பெண்கள் மற்றும் 27 ஆண்கள். பலருக்கு ஏற்கனவே வேறு நோய்கள் நிலைமைகள் இருந்தன. இறந்தவர்களில் பலர் காற்றுப் பதனாக்கம் (air conditioning) அல்லது மின்விசிறி இல்லாமல் தனியாகக் காணப்பட்டனர்.

வாஷிங்டன் பல்கலைக்கழகத்தின் உலக சுகாதார பேராசிரியரான கிறிஸ்டி ஈபி அவர்களின் கருத்துப்படி, இந்த வெப்ப அலையின் இறப்பு எண்ணி - க்கை தற்போதைய மதிப்பீடுகளை விட கூடுதலாக இருக்க வாய்ப்புண்டு. பல பகுதிகளிலிருந்தும் இறப்புச் சான்றிதழ்கள் சேகரிக்கப்- பட்டு முறையான பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும் என்றும், பிராந்திய வெப்ப அலை தொடர்பான இறப்புகளின் எண்ணிக்கையை முழுமையா - க் கணக்கிட மாதங்கள் எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கனடாவின் மேற்கு மாநிலங்களில் ஒரு வாரத்தில் மட்டும் ஏறக்குறைய 900 எரிநெருப்புகள் இடிமின்னலால் எற்பட்டன. காட்டுத்தீயிலிருந்து வரும் புகை மங்கலான கால நிலைமைகளை - யும் சுகாதாரக் கேடுகளையும் அபாயங்களையும் ஏழு மாநிலங்களின் பல பகுதிகளில் ஏற்படுத்த - லாமெனவும் சுவாசக் காற்று மாசடைதல் பற்றியும் கனடாவின் சுற்றுச்சூழல் வானிலைப் பிரிவு எச்சரித்தது.

செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சியூடாக இவற்றைப் பார்த்தபோது பன்னிரெண்டு ஆண்டுகட்குமுன் கனடாவின் மிகப்புகழ் பெற்ற புவிசார் அரசியல் ஆய்வறிஞர் பேராசிரியர் குவென் டயர் எழுதிய காலநிலைப் போர்கள் (Gwynne Dyer, Climate Wars, Vintage, 2009) எனும் நூலில் நான் வாசித்த காலநிலை மாற்றம் பற்றிய அவரது முன்னெச்சரிக்கைகள் பல மனக்கண்முன் தோன்றின.

சர்வதேச ரீதியில் வரவேற்புப் பெற்ற அந்நூல் தேசிய அளவில் அதிகூடிய பிரதிகள் விற்பனையாகிய நூல் பட்டியலிலும் இடம் பெற்றது. எமது வாழ்வுச்சூழல் பற்றிய தொடர்ச்சியான அக்கறையின்மை இன்னும் சில தாசப்தங்களில் எம்மையும் இந்த உலகையும் அழிவின் விளிம்பிற்குத் தள்ளிவிடும் பேராபத்து அதிக தூரத்தில் இல்லை என்பதை அப்போது இந்நூல் அடித்துக் கூறியது.

இங்கிலாந்தின் இலண்டன் பல்கலைக்கழகத்தில் போரியல் கல்வியில் முனைவர் பட்டம் பெற்ற இவர், கடந்த பல ஆண்டுகளாக உலக வெப்பமயமாதல் பற்றிய ஆய்வில் மிகுந்த பரந்த ஆழமான ஆய்வுகளில் ஈடுபட்டவர். தேசிய, சர்வதேச, பூகோள அரசியல் மட்டத்திலான நியதியான தீர்மானங்களே காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளக் கூடிய மாற்றீடுகளை நிர்ணயிக்க முடியும் என்பதையும் அவர் அறுதியாகக் கூறினார்.

வெறுமனே மின் குமிழ்களை மாற்றுவதும், கார்களில் பயணம் செய்வதற்குப் பதிலாக பஸ்ஸிலே பயணிப்பதனாலும் மக்கள் மத்தியில் ஒருவித விழிப்புணர்வை ஏற்படுத்தலாமேயன்றி இந்தப் பாரிய பிரச்சனையை தீர்க்கும் வழி இதுவல்ல என்பது அவரின் கருத்து.

இத்தகைய ஆய்வினில் தாம் ஈடுபடுவதற்கு இரண்டு முக்கிய காரணிகளை அவர் குறிப்பிடுகின்றார். முதலாவதாக உலகில் →

# பரவிவரும் காட்டுத்தீயும் கருகிவரும் எதிர்காலமும்

( முற்பக்கத் தொடர்ச்சி )

ஏற்படப்போகும் உக்கிரமான உணவுத் தட்டுப்பாடு, ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க கண்டங்களில் பலகோடி மக்கள் உணவுக்காக போராடும் கொடிய சூழலை உருவாக்கலாம் என்றும் காலநிலை மாற்றங்கள் பற்றிய கரிசனை ஏதுமின்றி வாழ்ந்தோமே - யாயின் இன்னும் 50 அல்லது 60 வருடங்களில் உணவுக்கும், நீருக்கும், மருந்துக்குமாய் சிறிய பெரிய நடுகளுகிடையில் உக்கிரமான போர்கூடத் துவங்கலாம் எனவும் நூலாசிரியர் விளக்குகின்றார்.

நாம் நினைப்பதைவிட அதிக விரைவிலேயே இவை ஏற்படலாம் என்பது நூலின் உட்கிடக்கை. இலங்கை, வங்காளதேசம் உட்பட பல மூன்றாம் உலகநாடுகளையே இது வெகுவாகப் பாதிக்கும் எனவும் இந்நூலில் எச்சரிக்கப்பட்டுள்ளது. பல நாடுகளில் விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள், அறிவியல் மேதைகளை நேர்காணல் செய்து எழுதப்பட்ட இந்நூல் வருங்கால, காலநிலையியல் பற்றிய பாடநூல் போன்றே இன்றுவரை கருதப்படுகின்றது.

அடுத்து வெப்ப மிகுகையால் ஏற்படும் பன்முக விளைவுகள் வலிமை - மிக்க நாடுகளுக்கிடையிலான இராணுவத் திட்டமிடல் அமைப்பு முறைகளிலும் தேசிய பாதுகாப்பு பற்றிய அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்கும் தன்மைகளிலும் பயங்காரமான அணுஆயுதப் போரினை - க்கூடத் தூண்டும் நிலை ஏற்படலாம் எனத் தாம் அச்சம் கொள்வதாக எழுதியுள்ளார்.

காலநிலை மாற்றங்களால் மனிதர்களும் அனைத்து உயிரினங்களும் ஊர்களும் உலகமும் சுற்றமும் சூழலும் எதிர்நோக்கும் பாரிய பேராபத்துகள் பற்றி பல்வேறு காத்திரமான முன்னெச்சரிக்கை - களைத் தரும் இந்நூல் இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் அனர்த்தங்களான சூறாவளிகள், புயல்கள், பெருவெள்ளங்கள், வானம்பார்த்த பூமியாக பல்வேறு ஆசிய - ஆபிரிக்க நாடுகளில் மழையின்றி ஆண்டுதோறும் ஏற்படும் அதீத நில வறட்சிகள், மறுபுறம் உயர்ந்துவரும் கடல்நீர் மட்டங்கள் மெல்ல மெல்ல வற்றிப்போகும் மூலவளங்கள், துரித கதியில் வீழ்ச்சியடைந்து வரும் விவசாய விளைச்சல்கள், பாரிய பொருளாதாரங்களைக்கூட பொசுங்கச் செய்துவிடும் என முன்னெச்சரிக்கை செய்துள்ளது.

மேற்குறிப்பிட்ட பிரச்சனைகளின் விளைவுகளாக அடிக்கடி இடம்பெறும் மனிதகுழும இடம்பெயர்வுகளும் தொற்றுநோய் பரவல்களும் இவை எல்லாவற்றிக்கும் மேலாக சில நாடுகளின் அடாவடித்தனமான தீவிரவாதக் கெடுபிடிகள் கொண்ட அரசியல் போக்குகளும் பெரிய சவால்களை எம்முன் குத்திட்டு நிற்கச்செய்கின்றன.

எமது பிள்ளைகளின் தொடர்சந்ததிகளின் எதிர்கால வாழ்வும் வளமும் பற்றி மிகவும் சிக்கலான பல கேள்விகள் எம்முன் எழுகின்றன.

வெப்ப அலைகளால் ஏற்படும் பாரிய நெருப்புகளும் அதன் விளைவு - களும் குடிநீரின் மாசடைவதற்கும், கடல்நீரின் வெப்பஅலை எழுச்சிக்கும், பாரிய நிலச் சரிவுகள், பூகம்பங்கள், சுனாமிகள், சூறாவளிகள், போன்ற பேரழிவுகளுக்கு வழிசமைக்கும் என்பது காலநிலைமாற்றம் பற்றிய ஆய்வாளர்களின் கருதுகோள்.

இந்த நூற்றாண்டின் முன்னரை முடியுமுன்பே காலநிலை மாற்றங்கள் பாரிய அழிவுகளை ஏற்படுத்தியுள்ளமை கண்கூடு. இயற்கையின் சீற்றம் கடந்த இரு தசாப்தங்களில் ஒரு முறைக்குமேல் கோரத்தாண்டவ - மாடியது நாம் அறிந்ததே. 2004இன் இறுதி மாதத்தில் பயங்கரமூட்டும் சுனாமிப் பேரலைகள் தமிழ் ஈழம், இலங்கை, இந்தியா, இந்தோனேசியா போன்ற பல நாடுகள் உள்ளடங்கலாக சொல்லிலடங்காத துயர்மிக்க கோரமான மனிதப் பேரழிவுகளை நிரந்தரமாகவே நினைவழியா வகையில் நிகழ்த்திச் சென்றன. இரண்டு இலட்சத்திலும் அதிகமானவர்களின் உயிர்களை சில மணித்துளிகளில் இந்த அலைகள் அடித்துச் சென்றன. இறந்தவர்களில் பெரும்பாலோர் குழந்தைகள், பெண்கள், முதியோர்.

2005ம் ஆண்டில் அமெரிக்காவின் நியூ ஓர்லியன்ஸ் மாநிலத்தில் கற்றீனா எனும் பெயர் கொண்ட சூறாவளி (Hurricane Katrina) மனித அவலம் நிறைந்த இயற்கையின் பேரழிவை மீண்டும் ஒருமுறை தலைதூக்கச் செய்தது. இதன்போது அமெரிக்க அரசின் அனைத்து மட்டங்களிலும் காணப்பட்ட பொறுப்பற்ற அலட்சியத்தன்மை, மிகவும் காரசாரமாக விமர்சிக்கப்பட்டது. இதில் மரணித்த ஈராயிரம் பேரில் பாதிப்பேருக்குமேல் கறுப்பு இனத்தவர்கள்

2020 ஜனவரியில் ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட காட்டுத்தீ ஒரு பில்லியன் மிருகங்களையும் மரம் செடி, கொடிகளையும், அரிய பல உயிரினங்க - ளையும் நெருப்புக்கு இரையாக்கியது. 2020 ஆகஸ்ட் முதல் இன்று -வரையாக அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் ஏற்பட்ட பெருநெருப்பு அம்மாநிலத்தின் நாலு மில்லியன் ஏக்கர் நிலப்பரப்பை தீக்கிரையாகியது, நூற்றுக்கு மேற்பட்ட உயிரிழப்புகள் நிகழ்ந்தன. அப்போதைய அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்ப் இதுபற்றிக் கூறியவை நகைப்புக்குரியது. இயற்கையின் அனர்த்தங்களுக்கும் மனித வாழ்வுக்கும் தொடர்பில்லை எனக் கூற முடியாது. குடி நீர் மாசுபடாத நாடே இன்று இல்லை என்று கூறும் அளவிற்கு இயற்கையின் வளங்களை மனித பேராசைகள் நாசமாக்கியுள்ளன.

இயற்கையின் பாரிய அனர்த்தங்களுக்கும் மனித, ஏனைய உயிரின வாழ்விற்கும், செயற்பாடுகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென நாம் வாழாதிருக்க முடியாது. இடைவிடாது இயற்கையை சுரண்டி, அழித்து, அளவுமீறி மாசுபடுத்தி, மனித பொருளாசைக்கும், பண வேட்கைக்கும் இயற்கையின் வளங்களை பாவனைப் பொருளாக்கும் பண்பு பற்றி நாம் காத்திரமாக சிந்திக்க வேண்டும்.

மனித வாழ்வினதும் இயற்கையினதும் தொடர்பும் தொடர்ச்சியும் பற்றி நாம் கூடிய, தார்மீக கரிசனை கொள்ளவேண்டும். நாம் வாழும் சூழல் மனித இனத்தின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் ஒவ்வாததாக மாறுமேயாயின் எமக்குப் பின்வரும் சந்ததியினரின் வாழ்வு எவ்வாறு அமையுமென நாம் எண்ணிப்பார்ப்பது அவசியமான ஒன்று.

நூலாசிரியர் குவென் டயர் குறிப்பிடும் பின்வரும் நான்கு விடயங்கள் மிக முக்கியமானவை. முதலாவதாக உலக வெப்ப அதிகரிப்பு நாம் எதிர்பார்த்ததை விட விரைவாகவே எம்மை ஆட்கொள்ளும். பல கோடி உயிர்களை அது காவுகொள்ளும். எனவே முன்கூட்டியே உலகநாடுகள் ஒன்றினணந்து இதன் வீச்சையும் விரைவையும் குறைப்பதற்கான செயற்பாடுகளில் விரைந்து ஈடுபடவேண்டும்.

அடுத்து, 2030க்குள் கிறீன் ஹவுஸ் வாயு உமிழ்வு பூச்சிய நிலைக்கு வராவிடின் மனித வாழ்வின் காலம் நீண்டதாக அமையுமா என்பது சந்தேகமானது. விமானங்கள் முதல் தெரு வாகனங்கள் ஈறாக பாரிய அளவில் கார்பன் வாயு உமிழ்வினை முற்றாகவே நிறுத்தும் நிலை வேண்டும் என்றும் எச்சரிக்கின்றார். மூன்றாவதாக பூமிசார் பொறி - யியல் (geo-engineering) வளர்ச்சி, பிரயோகம் பற்றி கூடிய கவனம் வேண்டும். இறுதியாக வெப்பநிலை அதிகரிப்பால் ஏற்படும் விளைவுகள் பாரிய எண்ணிக்கையில் மக்களின் இடப்பெயர்வுகளையும் நாடுகளுக்கிடையில் போர்கள் மூழும் நிலையைக்கூட ஏற்படுத்தும். இத்தகைய போர்கள் சூழல் சார்ந்த பிரச்சனைகளை இன்னும் மேலெழும்பச் செய்யும். இந்த நூலின் முடிவுகள் எமது எதிர்காலம் பற்றிய ஏக்கத்தையும் பீதியையும் வரவழைப்பவை.

கட்டுப்பாடற்ற அதீத தொழில் நுட்ப வளர்ச்சிகளின் மேலோங்குகை மனித வாழ்வின் எதிர்காலத்தை மட்டுமல்ல நாம் வாழும் இந்தப் பூமிப்பந்தின் சுற்றுச்சூழலையும் ஆபத்தான பேரழிவிற்கு இட்டுச்செல்லும் என்பதன் அறிகுறிகள் எம்மையும் மனித சந்ததிகளின் எதிர்காலம் பற்றியும் ஏக்கத்துடன் எச்சரிக்கை செய்கின்றன.

Indran B. Indrakrishnan MD FRCP (London); FRCP (C); FACP; FACG



# Colorectal Cancer

Colorectal cancer is an easily preventable, detectable, and treatable malignancy, but remains the second leading cause of cancer deaths in North America. More than 90% of colorectal patients can be cured if detected early enough by the appropriate screening tests. However, the compliance for colorectal cancer screening is poor; hence it remains one of the most common leading cause of cancer deaths.

The colon which is also known as large intestine/bowel is a long hollow organ like a tube and is final part of the digestive system. It's main function is to remove the water and electrolytes from the liquid waste (stool) and makes it solid as it comes out from the rectum.

The cancer usually develops from a benign growth called polyp, which grows on the lining of the colon & rectum. The polyp is generally shaped like a mushroom or occasionally a dome-like button & with time grows larger and eventually becomes cancer.

## Symptoms of Colon Cancer

The colon cancer may not give you any symptoms or trouble for a long time while growing in your colon. This is the main reason for this deadly cancer to remain as the second most common cause of cancer deaths in the North America. The following symptoms/ signs may signal the presence of colon cancer.

Rectal bleeding
Change in the bowel habits
Sense of incomplete evacuation of stool
Rectal pain
Abdominal pain
Bloating
Anemia
Feeling of tiredness and lethargy

*However, if you are already at risk for colon cancer, you should not wait for any symptoms to appear to undergo colonoscopy.*

**ARE YOU AT RISK?**

**Are you 50 years or over?**

Do you have a family history of colon cancer or polyps?

Do you have colitis or Cohn's disease?

Do you have a history of colon polyps or cancer?

Do you have a history of prostate, breast, and uterus, ovarian or cervical cancer?

Do you smoke or drink excess alcohol?
If you say yes to any ONE of the above questions, you may consider yourself at risk for colon cancer & consult your physician for colonoscopy.

## Diagnosis

Colonoscopy is considered as the gold standard to detect colorectal cancer and it is the only currently available procedure to remove the polyps which is the key in the prevention of colorectal cancer. Colonoscopy is a direct visual examination of the colon using a lighted flexible video endoscope. This painless procedure is done under sedation as an outpatient, and it takes usually 30 minutes to complete the exam. Colonoscopy is recommended starting at the age of 50 for both men & women as part of the physical but sooner if any high risks or warning symptoms or signs are found as mentioned above. However, it should be emphasized that colorectal cancer usually does not exhibit any symptoms and it is known as a silent killer. The other non-invasive screening tests include CT scan and Barium enema, but these are not sensitive as Colonoscopy and the polyps cannot be removed through these tests. A variety of simple stool tests have been available for many years, but these are neither sensitive nor specific. Cologuard stool test and Fecal Immunochemical test (FIT) are two screening stool tests which can be performed for those who do not want to undergo colonoscopy.

The message to our Sri Lankan community must be clear: Screening saves lives, and everyone should be screened.

**If you won't have a colon cancer check-up for yourself, do it for the ones who love to you & depend on you!**

Dr. Indran B. Indrakrishnan is Clinical Professor of Medicine, Emory University School of Medicine.
GDC Endoscopy Center LLC and Gwinnett Digestive Clinic PC.
475 Philip Blvd, Suite # 304, Lawrenceville, GA 30046.
www.GDCEndoscopy.com



எஸ். ராஜ்மோகன்

# பணிலமாடம் - 76

## நெறிமுறையற்ற திணிப்புகள்!

றோஸ் மில்லருக்கு நடந்தது யாருக்கும் நடக்கக் கூடாது என்றுதான் நாங்கள் நினைப்போம். ஆனால், இன்றைய சமூகவெளியில் இது பலருக்கும் நடந்துகொண்டுதான் இருக்கின்றது!

எண்பத்தைந்து வயதான றோஸ் மில்லருக்கு ஒரு புதிய தொலைக்காட்சி ஒன்றை வாங்கும் எண்ணம் தோன்றியது. அவர் அருகில் இருந்த The Source என்ற Bell Canada வுக்குச் சொந்தமான வியாபார நிறுவனத்திற்குச் சென்று தொலைக்காட்சி ஒன்றை வாங்குவதற்கு முயற்சி செய்தார். ஆனால், அங்கிருந்து திரும்பி வரும்போது அவர் தொலைக்-காட்சியை வாங்காமல் வேறு ஏதோவெல்லாம் வாங்கி வந்துவிட்டார். 'வாங்கப் போனேன் ஒரு வாழை மரம், வந்த பின்னே அது தாழை மரம்' என்றாகிவிட்டது மில்லரின் நிலை.

அந்த நிறுவனத்தில் கடமையில் இருந்த விற்பனைப் பிரதிநிதி, ஒரு தொலைக்காட்சிக்குப் பதிலாக இரண்டு வருட ஒப்பந்தங்களுடன் Bell fibe TV, புதிய செல்போன், data plan, warranty plan, cordless phone, land line இணைப்பு, அதிவேக Internet மற்றும், tablet என்று சகலவற்றையும் மில்லருக்கு விற்றுவிட்டார். அல்சைமர் நோய் இருப்பதாகக் கண்டறியப்பட்ட மில்லருக்கு என்ன நடந்தது என்று ஒன்றுமே ஞாபகத்தில் இல்லை. ஆனால், எல்லாவற்றையும் வாங்க வைத்துவிட்டார் அந்த விற்பனைப் பிரதிநிதி. மில்லரிடம் ஏற்கனவே செல்போன் உள்ளது. ஆனால், அவர் அதைப் பாவிப்பதில்லை. tablet என்றால் என்னவென்று தெரியாது. இணையத்தளம் என்றால் அதையும் பாவிக்கத் தெரியாது. ஆனாலும் அந்த விற்பனைப் பிரதிநிதி மில்லரின் தலைமேல் நன்றாகவே மிளகாயை அரைத்து அனுப்பிவிட்டார்.

"எனக்கு என்ன நடந்தது என்று சரியாகத் தெரியவில்லை. ஆனால், எனக்குத் தெரியாமல் அவர்களது தயாரிப்புகள் எல்லாவற்றையும் எனக்கு விற்று விட்டார்கள்" என்கிறார் மில்லர். றொறன்ரோ-வின் டபரின் வர்த்தக அங்காடியில் உள்ள கிளையில் கடமை புரியும் ஒரு விற்பனைப் பிரதிநிதியே நெறிமுறையற்ற விற்பனையில் தனது அப்பாவை ஏமாற்றிவிட்டதாக மில்லரின் மகன் ஜேம்ஸ் ஒக்டன் இது பற்றிக் கூறும் போது தெரிவிக்கின்றார். தொலைக்காட்சி வாங்கச் சென்றவருக்கு தொலைக்- காட்சியைத் தவிர மற்றவை எல்லாவற்றையும் கட்டாயப்படுத்தி விற்றுவிட்டார்கள் என்று மேலும் அவர் குற்றம் சாட்டுகின்றார். இது உண்மையில் ஓர் ஏமாற்றும் நோக்கம் கொண்ட விற்பனையாகவே கருதப்படுகின்றது. விற்பனைப் பிரதிநிதிகளுக்கு அவர்களால் செய்ய முடியாத விற்பனை இலக்கு -களை நிர்ணயித்து, அவர்களுக்குக் கொடுக்கும் அழுத்தங்களினாலே இப்படியான ஒழுக்கமற்ற விற்பனைகள் நடைபெறுவதாக வேறு கிளையில் பணிபுரியும் விற்பனைப் பிரதிநிதி ஒருவர் கூறுகின்றார்.

மில்லருக்கு நடந்த இந்த நெறிமுறையற்ற விற்பனைச் சம்பவம் கனடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் (சிபிசி) இடம்பெறும் Go Public (கோ பப்ளிக்) என்ற செய்திப் பிரிவு நிகழ்ச்சி மூலமாகவே பொதுமக்களுக்குத் தெரியவந்தது. சிபிசியின் கோ பப்ளிக் என்பது சிபிசி தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணைய ஒளிபரப்பில் நடைபெறும் ஒரு பொதுமக்கள் நலன் சார்ந்த புலனாய்வுச் செய்திப் பிரிவாகும். றோசா மார்ச்சிடெல்லி மற்றும் எரிகா ஜோன்சன் ஆகியோர் இந்தச் செய்திப் பிரிவில் கடமை புரிகின்றார்கள். 'நாங்கள் உங்களுக்கு நடந்த சம்பவங்களை புலனாய்வு செய்து பொதுவெளியில் சொல்கிறோம். அத்துடன் உங்களுக்கான உரிமைகளை பெற்றுத்தரவும் முயல்கின்றோம்' என்பது இந்த 'கோ பப்ளிக்'கின் நோக்கமாக உள்ளது.

எங்களுக்கு நடந்த மோசடிகள், ஏமாற்றங்கள் மற்றவர்களுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டுமென்றால் அல்லது எங்களுக்கு ஏற்பட்ட நெறிமுறையற்ற சம்பவங்களை பொதுவெளியில் பகிரங்கப்படுத்த வேண்டும் என்ற விருப்பம் இருந்தால் gopublic@cbc.ca என்ற மின்அஞ்சல் முகவரியுடன் நேரடியாகத் தொடர்புகொள்ள முடியும். அத்துடன் எங்களின் பூரணமான ஒப்புதலின் பின்னரே எமது விடயங்கள் பொதுவெளியில் வெளியிடப்படும் என்ற உத்தரவாதத்தையும் அவர்கள் தருகின்றார்கள்.

இந்த கோ பப்ளிக் மூலமாக புலனாய்வு செய்யப்பட்ட மில்லரின் சம்பவம் பெல் கனடா (Bell Canada) வுக்கு பல நெருக்கடிகளைக் கொடுத்தது. நெறிமுறையற்ற விற்பனைத் திட்டங்கள் தம்மிடம் இல்லை என்று பெல் கனடா கூறுகின்ற போதும் இந்த நெறிமுறையற்ற விற்பனைத் திட்டங்களை ஊக்குவிப்பது ஒரு நிறுவனத்தின் மேன்மைக்கு தீங்கு விளைவிப்பதாக வணிகத்துறை நிபுணர்கள் கூறுகிறார்கள்.

இது பற்றி பெல் கனடாவுக்கு விடுக்கப்பட்ட நேர்காணல் கோரிக்கையை அந்த நிறுவனம் மறுத்துவிட்டாலும் இறுதியில் மில்லரிடம் இருந்து பெறப்பட்ட கட்டணங்களைத் திருப்பிக் கொடுத்ததோடு, அவரது அனைத்து ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்தார்கள். அத்துடன் மில்லருக்கு நடந்த இந்த மோசமான அனுபவத்திற்காக மன்னிப்புக் கேட்டதுடன் உள்ளக விசாரணையை ஆரம்பிப்பதாகவும், அந்த விற்பனைப் பிரதிநிதிக்குரிய ஒழுங்காற்று நடவடிக்கைகளை எடுப்பதாகவும் உறுதிகொடுத்தார்கள்.

மில்லரைப் பொறுத்தவரையில், அவர் தனது மகனின் முயற்சியால் மட்டுமே தனக்குரிய நியாயத்தைப் பெற்றுக் கொண்டார். ஆனால், மில்லர் மட்டுமல்ல இவரைப் போன்ற பலர் இன்னும் பல வழிகளில் ஏமாற்றப்பட்டும், சுரண்டப்பட்டும் வருகின்றார்கள். பொருளாதாரம் மட்டுமே பிரதானமாக முன்னின்று, பிற அனைத்தையும் தீர்மானிக்கும் இன்றைய சூழலில் ஏமாற்றங்களை மட்டுப்படுத்துவதற்கு நாங்கள் எங்களைச் சுதாகரித்துக் கொள்வது அவசியம்.

கடந்து சென்ற தலைமுறையில் எவையெல்லாம் அறத்துக்கு விரோதமானது என்று அடையாளம் காணப்பட்டதோ அவையெல்லாம் இன்று ஒரு சாதாரண சமூக நடைமுறைகளாக இருப்பது தவிர்க்க முடியாததாகிவிட்டன. தனிமனித ரீதியிலும், சமூகவெளியிலும் வரைபுடைந்துபோன அறமும், நீதியுணர்வும் மீண்டு வருவதற்கு நாங்களே எங்களைத் தயார்படுத்துவதைவிட வேறு ஒரு வழியுமில்லை!■



கனகேஸ்வரி நடராஜா

# ஒரிகாமியும் உலக சமாதானமும்

ஒரிகாமி என்ற ஜப்பானிய கலையைப் பற்றி பலரும் அறிந்திருப்பீர்கள். கடதாசியை மடித்தும் வளைத்தும் உருவங்களைச் செய்யும் கலையே ஒரிகாமி என அழைக்கப்படுகிறது. கடதாசிகளை வெட்டவோ ஒட்டவோ கூடாது என்பதே இக்கலையின் விசேட அம்சம்.

பாரம்பரிய ஒரிகாமி 1603ம் ஆண்டு முதல் 18ம் ஆண்டுவரை - அதாவது இரண்டரை நூற்றாண் - டுகளுக்கு மேலாக பயிற்றுவிக்கப்பட்டது. இக்காலகட்டதை இடோ சகாப்தம் என ஜப்பானியர் அழைக்கிறார்கள். அகிரா யுசுவா என்பவர் ஒரிகாமியின் தந்தையென கூறப்படு - கிறது. இவர் நவீன முறையில் இக்கலையைப் பரப்பியதாகச் சொல்லப்படுகிறது.

ஒரிகாமிக் கலைக்கும் உலக சமாதானத்துக்கும் என்ன தொடர்பு என்று அறிய வேண்டுமெனில் ஜப்பான் நாட்டின் சரித்திரம் பற்றி சிறிதளவு பார்க்க வேண்டும். இரண்டாம் உலக மகாயுத்தம் 1939 - 1945 வரை நடைபெற்றது. இந்த யுத்தத்தின்போது 1945 ஆகஸ்ட் ஆறில் ஜப்பானிலுள்ள ஹிரோசிமா என்னும் இடத்துக்கு மேலாக அமெரிக்கா பாரிய அணுகுண்டை வீசியது. பி - 29 என்ற பொம்பர் (Little Boy) - சின்னப் பொடியன் என்ற அணுகுண்டை ஹிரோசிமா மீது வீசியதால் பாரிய அழிவு ஏற்பட்டது. எண்பதினாயிரம் பேர்வரை இது பலியெடுத்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அதன் கதிர்வீச்சுக்காளானார்கள். கதிர்வீச்சால் ஏற்பட்ட பாதிப்பு இவர்களுக்கு பல வருடங்களு - க்குப் பின்னரும் அவர்களின் உடலை விட்டுப் போகவில்லை. அவ்வாறு கதிர்வீச்சின் தாக்கு - தலுக்கு ஆளாகிய ஒரு சிறுமிதான் சடாகோ சகாகி என்பவள்.

இந்தச் சிறுமி 1943ம் ஆண்டு ஜூன் மாதம் 7ம் திகதி ஹிரோசிமாவில் பிறந்தார். அவளுக்கு இரண்டு வயதாக இருக்கும்போதே ஹிரோசிமா மீது அணுக்குண்டுத் தாக்குதல் நடைபெற்றது. அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியால் அவள் வீட்டின் ஜன்னலுக்கூடாக வெளியே எறியப்பட்டாள். தனது பிள்ளை நிச்சயமாக இறந்திருக்குமென நினைத்துக் கொண்டு அவளின் தாயார் போய் பிள்ளையைத் தூக்கினார். அப்பிள்ளைக்கு ஒருவிதமான பாதிப்பும் காணப்படவில்லை. ஆனால், அவளின் பேத்தியார் இந்தத் தாக்குதலில் காணாமல் போய்விட்டார்.

அவளின் தாயார் இவளையும் இவளது சகோதரனையும் தூக்கிக் கொண்டு கறுப்பு மழையினூடாக, அதாவது சாம்பல் மழைக் - கூடாக தப்பிச் செல்கிறாள். சடாகோவில் ஒரு பாதிப்பும் காணப்படவில்லை. பாடசாலையில் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக விளங்கினார். பன்னிரண்டு வயதாக இருக்கும்போது விளையாட்டு மைதானத்தில் மயங்கி விழுந்ததால் வைத்தியசாலையில் அனுமதிக்க நேர்ந்தது. ஏனைய சிறுவர்களுக்கு ஏற்பட்டதுபோலவே அணுகுண்டுத் தாக்குதலால் இவளுக்கும் புற்றுநோய் ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் கூறினார்கள்.

சடாகோவின் நோய் மிக விரைவாக முற்றிக்கொண்டு வந்தது. அப்பொழுது அவளுடைய தோழன் ஒருவன் ஒரிகாமி முறைப்படி செய்யப்பட்ட காகிதக் கொக்கு ஒன்றை அவளுக்குப் பரிசளிக்கிறான். நோய்வாய்ப்பட்டவர்கள் ஆயிரம் கடதாசிக் கொக்குகளைச் செய்து கடவுளுக்குச் சமர்ப்பித்தால் அவர்களின் வேண்டுதல்களை இறைவன் நிறைவேற்றுவான் என்ற நம்பிக்கை ஜப்பானில் உண்டு. அதனையும் அவளுக்குக் கூறிச் செல்கிறான். அன்றிலிருந்து பன்னிரண்டு வயதுச் சிறுமியான சடாகோ தனக்காகவும் தன்னைப் போன்று கதிர்வீச்சால் ஏற்படும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஏனைய சிறுவர்களுக்காகவும் இறைவனிடம் வேண்டுதலைச் சமர்ப்பித்துவிட்டு ஆயிரம் காகிதக் கொக்குகளைச் செய்யும் முயற்சியில் இறங்குகிறாள்.

மருத்துவமனையில் கிடைக்கும் மருந்து எழுதும் சீட்டுகளில்கூட கொக்குகளைச் செய்கிறாள். அறுநூற்றி நாற்பத்திநான்கு ஒரிகாமி கொக்குகளைச் செய்து முடித்த நிலையில் சடாகோவை அவளது பன்னிரண்டாவது வயதில் - அதாவது ஹிரோசிமா அணுக்குண்டுத் தாக்குதலின் பாதிப்பு ஏற்பட்டு பத்து வருடங்களின் பின்னர் புற்றுநோய் பலியெடுக்கிறது. 1955 அக்டோபர் மாதம் 25ம் திகதி அவள் மரண-மடைகிறாள். அவளின் மரணம் ஜப்பானையே உலுக்குகிறது. உலக சமாதானத்தின் சின்னமாக அவள் மாறுகிறாள்.

'நான் வாழும் இந்த உலகத்தை மக்கள் வாழக்கூடிய ஓர் உலகமாக நான் வாழும்போதே மாற்ற வேண்டும்" என வேண்டுதல் செய்தவள் அவள். ஒரு சிறுமியின் கண்களூடாக உலக சமாதானத்தைப் பார்த்தனர்.

1958ல் ஹிரோசிமா ஞாபகார்த்தப் பூங்காவில் சடாகோ சகாகி ஒரு கொக்கை ஏந்திய வண்ணம் காட்சியளிக்கும் ஒரு சிலை நிறுவப்பட்டது. அதன் கீழ் பின்வரும் வாசகம் எழுதப்பட்டிருக்கிறது: 'இதுவே எங்கள் அழுகை, இதுவே எங்கள் பிரார்த்தனை. உலகில் சமாதானம் நிலவ வேண்டும்" (This is our cry, this is our prayer, peace is the world). ஜப்பானின் வருடாந்த சமாதான நாளாகிய ஆகஸ்ட் ஆறாம் திகதி சடாகோ சகாகிக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

2013ல் சித்திரக் கலைஞர் சூ டிசிசோ உலக சமாதான கொக்குத் திட்டம் (Peace crane project) என்பதனை ஆரம்பித்து, உலகம் முழுவதுமுள்ள சிறுவர்களை ஒன்றிணைத்து கொக்குகளை ஒரிகாமி மூலம் செய்வதை மேற்கொண்டு வருகிறார். இதனூடாக மனிதநேயம் பேணப்படுகிறது. மனிதாபிமானம் பரப்பப்படுகிறது.

சகாகியின் மறைந்த தினமாகிய அக்டோபர் 25ல் ஜப்பானிலுள்ள பாடசாலைகளில் அவரின் கதையை நினைவு கூர்வதுடன் அவருக்காக ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஆயிரம் கொக்குகள் செய்யப்பட்டு பார்வைக்கு வைக்கப்படுகிறது. சகாகி விரும்பிய உலக சமாதானத்துக்காக குழந்தைகள் இறைவனிடம் தங்கள் வேண்டுதல்களை சமர்ப்பிக்கிறார்கள். போரினால் எத்தனை வகையான பாதிப்புகளும் அழிவுகளும் ஏற்படுகின்றன.

ஒரு குற்றமும் செய்யாத ஒன்றுமே அறியாத குழந்தைகளுக்கு ஏற்படும் உடல், உள பாதிப்புகள் மிகவும் கொடூரமானவை.■



இரா. சம்பந்தன்

# ஈ பொறுக்காத் தேகத்தில் இன்று !

மந்தாரை மலர்ந்து மணக்கின்றதே மாலைக்காலம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன் என்றாள் அவள். தோழி எதுவும் பேசவி - ல்லை. நான் பாரிஜாதம் மலரும் நள்ளிரவு வரை உறங்காமல்தான் இருப்பேன் என்றாள் அவள் மீண்டும். தோழி நிலத்தையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

நான் சொல்வது கேட்கிறதா என்றாள் அவள். நீ சொல்வது மட்டுமா கேட்கின்றது. நீ நினைப்பது கூடத் தான் கேட்கிறது என்ன செய்வது எல்லாம் விதி, அதனால் பேசாமல் இருந்தேன் என்றாள் தோழி.

விதி என்று சொல்லாதே. என் கணவன் ஒழுக்கம் இல்லாதவன் என்று சொல்லு. என்னுடன் வாழ்வது. இடையிலே பிற பெண்க - ளோடு சென்று குடும்பம் நடத்துவது. மறுபடியும் ஏதாவது பொய்ச் சமாதானம் சொல்லி என்னிடமே திரும்பி வந்து வாழ்வது. பின்பு ஒருநாள் திரும்பவும் ஓடிப்போவது. இப்படித்தானே அவன் நடந்து கொண்டிருக்கிறான். அறிவு என்று ஒன்று இல்லையா இவனுக்கு இதனைச் சொல்லும்போதே அழுதுவிட்டாள் அவள்.

அதோ உன் கணவனின் நன்பன் வருகிறான். உன்னைத் தேடித்தான் வருகிறான்போல இருக்கிறது. கண்ணைத் துடைத்துக்கொள்.

வரட்டும் வரட்டும், கடந்த முறை இவன் சொன்ன பொய்களை நம்பித்தான் நான் என் கணவனைச் சேர்த்துக் கொண்டேன். இந்த முறை என்ன பொய்யோடு வருகிறான் என்றுதான் பார்ப்போமே என்றாள் அவள்.

அதற்குள் அந்த நண்பனும் வந்து விட்டான். அம்மாடி உனக்கு இனிமேல்தான் நல்லகாலம் அமைய இருக்கின்றது. உனது கணவன் உன்னை நினைத்து எப்படியெல்லாம் வருந்தத் தொடங்கிவிட்டான் தெரியுமா என்று ஆரம்பித்தான் நண்பன்.

கோபத்தோடு இடைமறித்தாள் அவள். பொய் சொல்லாதே நீ பாட்டு இசைக்கும் பாணர் சமூகத்தைச் சேர்ந்தவன். உனக்கு உடுக்கு என்ற வாத்தியம் பற்றி நன்றாகத் தெரியும். உடுக்கின் வலப்புறத்தில்தான் உன்னவர்கள் அடித்து ஓசை எழுப்புவார்கள். அதன் இடப்புறமோ வேண்டுவாரற்றுக் கிடக்கும் இல்லையா

அதுபோல உன் நண்பனுக்கு நான் உடுக்கின் இடப்பக்கம் போலத் தேவையற்றவள். மற்றப் பெண்களோ அந்த உடுக்கின் வலப்புறம் போல என்றைக்கும் பயன்படுபவர்கள். ஆகவே நீ போய் உனது பொய்க் கதைகளை எல்லாம் அவர்களுக்கு சொல். அவர்கள் சந்தோசப்படுவார்கள் என்றாள்.

கொடியவை கூறாதி பாண! நீ கூறின்
அடிபைய இட்டொதுங்கிச் சென்று - துடியின்
இடக்கண் அனையம்யாம் ஊரற் கதனால்
வலக்கண் அனையார்க் குரை.
- (சமணர்களின் நாலடியார் செய்யுள் 388)

பாணன் திரும்பிச் சென்றதும் அதுவரை மௌனமாக இருந்த தோழி கேட்டாள்.

உனது கோபம் எனக்குப் புரிகின்றது. ஆனால் கால முதிர்ச்சி என்பது மனிதர்களின் குறைகளைத் திருத்தக் கூடியது இல்லையா? அதனாலே உன் கணவனுக்கு இறுதியாக இன்னுமொரு சந்தப்பம் கொடுத்துப் பார்க்கலாம் இல்லையா!

சிரித்தாள் அந்தப் பெண். கால முதிர்ச்சி மனிதர்களின் குறைகளைத் திருத்திவிடும் என்பது உண்மைதான். ஆனால் அது அவனுக்கல்ல. எனக்குத்தான் பொருந்தக் கூடியது. ஏன் தெரியுமா, நான் அவனை மணம் முடித்த காலத்தில் மிகவும் இளையவள். அவன் மீது கொண்ட அன்பின் மிகுதியால் அவன் பிறரோடு பேசுவது சுட எனக்குப் பிடிக்காது.

அவன் என்னையே நினைக்க வேண்டும். என்னைப் பற்றியே பேச வேண்டும். என்னுடனேயே இருக்க வேண்டும் என்று அந்த வயதிலே நினைப்பேன். அவ்வளவும் ஏன். அவன் உடம்பிலே ஒரு ஈ வந்து இருந்தால் கூட அதைப் பொறுக்க முடியாமல் மனதுக்குள்ளே வருந்தியவள் நான். ஒரு ஈக்குக் கூட அவன் உடலிலே ஒரு துளி இடம்கூடக் கொடுக்க விரும்பாதவள் நான். அது ஒரு காலம்.

அதே நான்தான் மார்பிலே சந்தணம் பூசிய விலைமாதுப் பெண்களோடு அவன் நட்பு வைத்து அவர்கள் அவனைக் கட்டியணைத்து தங்கள் மார்புகளால் தீப்பொறி பறக்கக் கூடியதாக அவன் தேகத்தை உரசி வீட்டுக்கு அனுப்பிய நாட்களில் அவர்களின் சந்தணச் சாந்து என் கணவன் தேகத்திலே எவ்வளவு நீளத்துக்குப் படிந்திருக்கிறது என்பதை என் கண்களால் அளந்து கொண்டு எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தேன்.

இவன் தனது வயல் வாய்க்காலிலே முளைக்கும் கோரைப் புல்லைப் பார்த்துப் பார்த்து பிடுங்கி எறிகிறானே, ஏன் அவை இருந்தால் பயிருக்கு போதிய தண்ணீர் கிடைத்து நன்றாக அவை வளர மாட்டா என்று தானே. அது மாதிரித்தானே எங்கள் வாழ்க்கையும்.

தனது வயலிலே புல்லைப் பிடுங்கி எறிந்து பயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் உள்ள இவனுக்கு தன் வாழ்வின் உயர்வுக்கு தடையான இந்தக் களை போன்ற தன் வைப்பாட்டிப் பெண்களை விலக்கி எறிந்து விட்டு என்னைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் ஏன் தோன்றுவதில்லையோ எனக்குத் தெரியாது என்றாள் அந்தப் பெண்.

சாய்ப் பறிக்க நீர் திகழும் தண் வயல் ஊரன்மீது
ஈப் பறக்க நொந்தேனும் யானேமன்! தீப் பறக்கத்
தாக்கி முலை பொருத தண் சாந்து அணி அகலம்
நோக்கி இருந்தேனும் யான்
- ( சமணர்களின் நாலடியார் செய்யுள் 389 )

சமணர்கள் குடும்ப வாழ்வு பற்றியும் பெண்கள் பற்றியும் மிகக் கடுமையான கருத்துக்களைக் கொண்டிருந்தவர்கள் என்ற அபிப்பிராயம் பொதுவாக பலரிடமும் உண்டு. ஆனால் நாலடியார் சொல்லும் செய்திகளோ அதற்கு மாறாகவே இருக்கின்றன.

பண்பாட்டு மீளுருவாக்கம் - 3



பொன்னையா விவேகானந்தன்

# மரபும் மாண்பும் 17

## கட்டுமானத்தளத்தைப் புரிந்து கொள்ளுதல்

கட்டப்படுகின்ற வீடுகள் கூட, பருவகாலங்கள், நிலம், பொருளாதாரம் என்ற தன்மைகளுக்கு அமையவே நிர்ணயம் பெறுகின்றன. இது போன்றே ஆளுமை செலுத்தும் புற, அகத்தாக்கங்களுக்கு ஏற்ப, பண்பாட்டுக் கட்டுமானங்கள் தோற்றம் பெறுகின்றன அல்லது மாற்றம் பெறுகின்றன. எனவேதான் பண்பாட்டு மீளுருவாக்கத்துக்கு முன்னர், கட்டுமானம் கட்டமைக்கப்படும் தளத்தைப் பற்றிய முழுமையான புரிதலும் தெளிந்த சிந்தனையையும் வலுவான கருத்துருவாக்கத்துக்குத் துணை செய்யும்.

பெயர்வுச் சமூகத்தின் வாழ்புலங்கள் அனைத்தும் ஒரே மாதிரியானவையல்ல. ஆழமற்ற நோக்கில் இப்புலங்களை இரு பிரிவுகளாக வகுக்கலாம். அவை, ஆங்கிலத்தை முதன்மொழியாகக் கொண்ட நாடுகள், ஆங்கிலத்தை முதன்மொழியாகக் கொண்டிராத நாடுகள்.

இவற்றை நுணுகி நோக்கின் இவை வேறுபட்ட வாழ்புலங்களைக் கொண்டவை. பண்பாட்டு மீளுருவாக்கம் என்பது பெயர்ச் சமூகத்தினர் அனைவருக்குமே பொதுவானது எனினும் இவ்விரு தளங்களுக்கிடையேயான வேறுபட்ட பண்புகள் பண்பாட்டு மீளுருவாக்கத்தில் தாக்கம் செலுத்தவல்லன.

அத்துடன் பெயர்வுச் சமூகத்தினர் வாழும் நாடுகள் ஒவ்வொன்றும் கொண்டிருக்கும் பலவினப் பண்பாடு தொடர்பான கொள்கைகளும் சட்டங்களும் கூடப் பண்பாட்டு மீளுருவாக்கத்தின் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை. ஏற்கனவே குறிப்பிட்ட ஒரு நாட்டின் தேசியப் பண்பாட்டின் ஆளுமையும் மிகத் துல்லியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

## ஆங்கிலத்தை முதன்மொழியாகக் கொண்ட நாடுகள்

பெயர்ந்த தமிழர்கள் ஆங்கிலமொழிச் சூழலை விரும்பி நாடிச் சென்றதற்கான காரணங்கள் சிலவற்றை நோக்குவோம்.

இந்தப் பட்டியலுக்குள் கனடா, பிரித்தானியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து என்பன அடங்குகின்றன. இந்த நாடுகளை நோக்கிப் பெயர்ந்து தம்மை நிலைநிறுத்திக் கொண்ட தமிழரில் கணிசமானோர் கல்விப்பின்புலம் கொண்டவர்களா - கவே இருந்தனர். ஆங்கில வழிப்பட்ட நாடுகளில் தமது எதிர்காலத்தைச் சிறப்பாக அமைத்துக்கொள்ள முடியும் என்ற கருத்தே இதற்குக் காரணமாக அமைந்தது. பிறநாடுகளுக்குச் சென்றோர் தமது பிள்ளைகளின் கல்வி எதிர்காலம் கருதியும் ஆங்கில-வழி நாடுகளுக்குப் பெயர்ந்தனர். எடுத்துக்காட்டாக, ஐரோப்பிய ஒன்றியத்துடன் பிரித்தானியா இணைந்திருந்த காலத்தில் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த தமிழர்கள், பிரித்தானியாவுக்குப் பெயர்ந்தனர். இது ஐரோப்பாவுக்குள் நடைபெற்ற மற்றுமொரு குறிப்பிடத்தக்க பெயர்வாக அமைந்தது.

பிரித்தானியரின் இரண்டு நூற்றாண்டுகால ஆட்சிக்குட்பட்டிருந்த இலங்கையில், தமிழர்கள் பெரிதும் ஆங்கிலத்தை முதல்நிலைக் கல்வி மொழியாகவோ அல்லது இரண்டாம்நிலைக் கல்வி மொழியாகவோ கொண்டிருந்தனர். அதாவது பெயர்வுக்கு முன்பாகவே ஆங்கில மொழியோடு நெருக்கம் கொண்டவர்களாக இருந்தனர்.

தமிழர் ஆங்கிலவழி நாடுகளுக்குப் பெயர்ந்தபின், மொழித்தொடர்பாடலில் கடும் சிக்கல் - களை எதிர்கொள்ளவில்லை. பெயர்ந்த முதல் தலைமுறையினரே வேலைத்தளங்களிலும் கல்வித்துறையிலும் ஆங்கிலத்தைப் பயன்படுத்தினர். இதனால் கல்வி, வேலைத்தகுதி என்பன தமிழரிடையே வேகமாகப் பெருகியது. முதல் தலைமுறை வாழ்வில் கூட, வீடுகளில் உரையாடல் மொழியாக ஆங்கிலம் தவழத் தொடங்கியது.

ஆங்கிலப் பண்பாட்டுச் சூழலுக்குள் பிறவினத்தோர் பலரையும் போல, சற்று வேகமாகவே தமிழர்கள் உள்வாங்கப்பட்டனர். அன்றாட நடத்தைகள், பழக்கவழக்கங்கள், விழாக்கள், சடங்குகள் என்பனவற்றில் ஆங்கிலப் பண்பாட்டுச் சாயல்கள் தென்படத் தொடங்கிவிட்டன. ஏற்கனவே குறிப்பிட்ட அந்நாடுகளுக்கான தேசியப் பண்பாட்டுச் சூழலுடன் விரைவிலேயே ஒத்தோட ஆரம்பித்துவிட்டன எனலாம்.

தமிழ்மொழி அன்றாட தொடர்பாடல்மொழி என்ற நிலையில் இருந்த செல்வாக்கை மெல்லமெல்ல இழந்து வருகின்றது. எடுத்துக்காட்டாக, இந்நாடுகளில் நடைபெறும் (யாழ்ப்பாணக் கல்வி மையங்களை அடிப்படையாகக் கொண்ட) பல பழைய மாணவர் சங்கக் கூட்டங்களில் ஆங்கிலமே உரையாடல் மொழியாகத் திகழ்கின்றது. ஆங்கில - மொழிப் பயன்பாடு குறித்த பெருமையுணர்வு இப்போதும் தமிழர் எண்ணங்களில் ஒட்டிக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறான தாக்கங்கள் ஆங்கிலமொழி அல்லாத நாடுகளில் குடியேறியோரின் வாழ்க்கைச் சூழலில் இருந்து குறிப்பிடத்தக்க இடைவெளிகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

## ஆங்கிலத்தை முதன்மொழியாகக் கொள்ளாத நாடுகள்

ஆங்கிலத்தை முதன்மொழியாகக் கொள்ளாத நாடுகளான பிரான்ஸ், ஜெர்மனி, சுவிற்சலாந்து, நோர்வே, டென்மார்க், இத்தாலி, சுவீடன், பின்லாந்து, நெதர்லாந்து, ஸ்பெயின், பெல்ஜியம் போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். இந்த நாடுகளுக்குப் பெயர்ந்தோருக்கு இங்கு பேசப்பட்ட மொழிகள் புதியனவாக இருந்தன. எனினும் குறிப்பிடத்தக்கோர் தொடர்பாடல் என்ற அளவில் புரிந்து கொள்ளவும் பேசவுமான ஆற்றலை அந்தந்த நாட்டு மொழிகளில் ஏற்படுத்திக் கொண்டு வேலைவாய்ப்புகளைப் பெற்றனர். அவை பெரிதும் கல்விப் பின்னணியுடன் தொடர்பில்லாத வேலைகளாகவே இருந்தன. இதனால் அந்நாடுகளில் வாழும் தமிழர்கள் இன்றளவும் தமிழையே வீட்டுமொழியாகக் கொண்டுள்ளனர். தமது அன்றாட நடத்தைகளிலும் பழக்கவழக்கங் - களிலும் விழாக்கள், சடங்குகள் போன்றவற்றிலும் பெரிதும் தமிழர் அடையாளங்களைக் காத்து வருகின்றனர். அத்தோடு, தாயகப் பயணங்களை அடிக்கடி மேற்கொண்டு, தாயக உறவுகளையும் பேணி வருகின்றனர்.

தமிழ்மொழிக்கல்வி என்ற நிலையில் இந்நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் தொடர்பாடலில் தமிழைப் பயன்படுத்துவதில் ஆங்கிலவழி நாடுகளில் கற்போரைவிட மேம்பட்டுள்ளனர். இந்நாடுகளில் வாழும் தமிழர்கள், தமிழ்மொழி வழிப்பட்ட வாழ்வோடு பெரிதும் இணைந் - திருந்திருப்பதினால் அடுத்த தலைமுறையினரும் தொடர்பாடல்களில் இரு மொழியையும் சரளமாகப் பயன்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளனர்.

தாயகத்தில் உள்ளோர், வெளிநாடுகளில் இருந்து வரும் உறவினர்களில் ஆங்கிலவழி நாடுகளில் இருந்து வருவோருக்கும் பிற நாடுகளில் இருந்து வருவோருக்குமான வேறுபாடுகளைத் துல்லியமாகக் கணிப்பிட்டுக் கூறுகின்றனர்.

புலம்பெயர்தோர் வாழும் நாடுகளுக்கமைய வேறுபட்டிருக்கும் வாழ்க்கைமுறை பண்பாட்டு மீட்டுருவாக்கத்தின்போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.■



கனடா மூர்த்தி

# தாய் மண்ணே வணக்கம்! - 17

ஈச பிரான் கோயில் நாராயண பிரான் கோயிலை விட அமைப்பில் சற்று மாறுபட்டதாகத் தென்பட்டது. ஈச பிரான் கோயிலின் கூரைப்பகுதிகள் வேலைப்பாடுகள் கொண்டவையாகவும் இருந்தன. கோயிலுக்கு அருகே இரும்பினால் அமைந்த ஒரு உயரமான அமைப்பும் தென்பட்டது. பார்ப்பதற்கு அது ஒரு ஊஞ்சல்போலவும் தோன்றியது. அது என்னவாக இருக்கும் என்ற ஆவலுடன் ஈசபிரான் கோயிலை நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

“இந்த ஈச பிரான் ஆலயம் கல்லால் கட்டப்பட்டதற்கான ஆதாரங்களோ சான்றுகளோ கிடைக்கப் பெறவில்லை. இந்த ஆலயத்திலும் சிவலிங்கத்தை வைத்து வணங்கும் வழக்கம் இருந்திருக்கிறது. கிபி ஆறாம் நூற்றாண்டிற்கும் எட்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இக்கோயில் உருவாகியிருக்க வேண்டும்.” என்று விபரங்களை அடுக்க ஆரம்பித்தார் அரும்பொருளகப் பணியாளர்.

“அதாவது பல்லவர் ஆட்சி மருவி சோழர்கள் ஆதிக்கத்திற்கு வந்துகொண்டிருந்த காலத்தில் தாய்லாந்தில் அமைந்த சிவன் கோயில்களில் ஒன்று இது” என மனதுள் சொல்லிக் கொண்டேன். இந்தக் கோயில் கட்டிட வடிவத்தைப் பார்க்கும்போது அது சமீப காலத்திற்கு உரியது என்பது சந்தேகத்திற்கு இடமின்றித் தெரிகிறது. ஆரம்பகாலக் கட்டிடங்கள் எப்படி இருந்திருக்கும். மரத்தால் செய்த கட்டிடமா? அல்லது செங்கட்டிகளால் கட்டியிருப்பார்களா?

“இவ்வாலயத்திலிருந்து பெறப்பட்ட இரண்டு சிவலிங்கங்களில் ஒன்று 6ம் 8ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகவும் மற்றையது 8ம் அல்லது 9ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகவும் இருக்குமென ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது” என்று கூடுதல் தகவல் தந்தார் அரும்பொருளகப் பணியாளர். “ஓ.. அப்படியா.. சிவலிங்கங்களைத் தவிர வேறேதாவது கற்சிலைகள் இருந்திருக்கின்றனவா?” என்று கேட்டேன்.

“இல்லை... ஆனால் இங்கு இருந்து பெறப்பட்டதாக உலோகத்தாலான நடராஜர், பார்வதி சிலைகளும் இன்னுமொரு விநாயகர் சிலையும், ஹம்சா அன்னமும் நமது அரும்பொருளகத்தில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றன” என்றார். அவையெல்லாம் இக்கோயிலின் உற்சவ மூர்த்திகளாக இருந்திருக்கக்கூடும் என்று நினைத்துக் கொண்டேன் நான்.

“அதுசரி.. அங்கேயிருப்பது என்ன..? பார்ப்பதற்கு ஒரு ஊஞ்சல்போல இருக்கிறதே...” என்று கேட்டேன் நான். “ஆம். ஊஞ்சலேதான். இந்த இராட்சத ஊஞ்சல் *Sao Chingcha* என்று நமது மொழியில் அழைக்கப்படுகிறது. இதையொத்த இராட்சத ஊஞ்சல் ஒன்று தாய்லாந்தின் பாங்கொக் நகரிலும் கண்டிருப்பீர்கள். பாங்கொக்கின் பழமைகொண்ட தேசிய அடையாளங்களில் ஒன்றாக அந்த ஊஞ்சல் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அந்த பாங்கொக் ஊஞ்சலானது நமது இந்த ஈசபிரான் கோயிலின் ஆராதனை வழக்கத்தைப் பின்பற்றி 18ம் நூற்றாண்டுகளில் பாங்கொக் நகரில் அமைக்கப்பட்டதாகும்” என்றார் அரும்பொருளகப் பணியாளர்.

தாய்லாந்தின் அரசவைச் சடங்குகளின்போது தாய்லாந்தின் மன்னரின் முன்னால் ‘Triyampawai’ என்றழைக்கப்படும் திருவெம்பாவை, திருப்பாவை ஆகிய தமிழ்ப் பதிகங்களைப் பாடுவார்கள் எனப் பலரும் எழுதிப் படித்திருக்கிறேன். ஒரு காலத்தில் அப்படி இருந்தது உண்மைதான். தற்போது தாய்லாந்து மன்னர் சடங்குகளில் ‘திருப்பாவை, திருவெம்பாவை ஆகியவற்றை ஓதும் வழக்கம்’ வழக்கொழிந்து போய்விட்டது. இருப்பினும் பாங்கொக் தலைநகரிலுள்ள Devasathan என்றழைக்கப்படும் ஒரேயொரு ஆலயத்தில் மட்டும் திருப்பாவை, திருவெம்பாவை பாடும் வழக்கம் இன்னும் உண்டு. அதுபற்றி நம் உரையாடல் திரும்பியது.



“இன்று *Triyampawai* ஓதும் வழக்கம் *Devasathan* கோயிலில் மட்டும்தான் கடைப்பிடிக்கப்படுகிறது. அந்த வழக்கம் இந்த ஈச பிரான் கோயிலில் இருந்தே எடுக்கப்பட்டு பின்னர் மன்னர் சடங்காக மாற்றப்பட்டு அரசவைக்குக் கொடுக்கப் - பட்டிருக்கிறது. அந்த வழக்கத்தை நாக்கோன் சிதம்மராத்தின் பிராமண குலத்தவர்களே அரசவைக்கு அறிமுகப்படுத்தியதாகவும் சொல்லப் - படுகிறது. இப்படியான பல சமயச் சடங்குகள் மறைந்துவிட்டன” என்ற அவர் “*Triyampawai* உற்சவத் -தின்போது கோயிலின் உற்சவ மூர்த்திகளும், பிராமணர்களும் ஒரு பெரிய ஊஞ்சலில் ஒன்றாக அமர்ந்து ஆடும் சடங்கும் நமது இந்த ஈச பிரான் ஆலயத்தில் ஒரு காலத்தில் இருந்திருக்கிறது. இன்று அது எங்கும் இல்லை” என்று சொல்லியவாறே அந்த ஊஞ்சல் அமைந்திருக்கும் இடத்திற்கு சென்றார். நானும் தஸானியோடு அவரைப் பின்தொடர்ந்தேன். மூவரும் அந்த Sao Chingcha என்றழைக்கப்படும் இராட்சத ஊஞ்சலை கண்கொட்டாமல் பார்த்தோம்.

“இப்போதும் திருவெம்பாவை உற்சவம் இங்கு கொண்டாடப்படுகிறதா?” என்று நான் கேட்க அதற்கு “உண்மையைச் சொல்வதாயின் பல்லாண்டுகாலமாக Triyampawai உற்சவம் இவ்வாலயத்தில் இல்லாதிருந்தது. ஆனால், தாய்லாந்துப் பிராமண குலத்தவர்களின் இடைவிடாத முயற்சி காரணமாக 2001ம் ஆண்டில் நக்கோன் சி தம்மாராத் மாநகர சபை இச்சடங்கை மீள் அறிமுகப்படுத்தியிருக்கிறது. தாய்லாந்தின் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களின்போது இவ் ஊஞ்சல் விழா இந்தக் கோயில் முன்றலில் விமரிசையாக் கொண்டாடப்பட்டும் வருகிறது. தாய்லாந்துப் பிராமண குலத்தவர்களே தற்போதும் ஊஞ்சல் விழா சடங்குகளைச் செய்கிறார்கள்” என்றார் அரும்பொருளகப் பணியாளர். எனக்கு இந்த விபரங்கள் புதிதாக இருந்தன. என்னை மேலும் ஆச்சரியப்படுத்தும் விதமாக இன்னொன்றையும் சொன்னார் அரும்பொருளகப் பணியாளர்.

“*Triyampawai* பாடப்படும் வழக்கம்தான் தற்போது இங்கு இல்லை. ஆனால் சித்திரைப் புத்தாண்டு உற்சவ ஆரம்பத்தின்போது ‘தென்னாடுடைய சிவனே போற்றி’ என்ற தமிழ் வரி-களை ஒரு சுலோகம் போல உச்சரித்து அதன் பின்னர்தான் ஏனைய சமயச் சடங்குகள் தொடங்கப்படுகின்றன” என்றார் அவர். எனக்குப் புல்லரித்தது.

ஒன்று மட்டும் நிச்சயம். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இங்கு வாழ்ந்த பிராமணர்கள் தமிழகத்திலிருந்து வந்த தமிழ்ப் பிராமணர்களாகத்தான் இருக்க வேண்டும். தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவும்வகை செய்திருக்கிறார்கள். அவர்களின் இன்றைய சந்ததியினரைக் காணவேண்டும் என்ற ஆர்வமும் என்னுள் பற்றிக் கொண்டது. “தலைமுறை தலைமுறையாக இங்கு வாழும் தாய்லாந்துப் பிராமணர்களைக் காணமுடியுமா?” என்றேன்.

(இன்னும் வரும்)



அ. முத்துலிங்கம்

# "ஒருவருக்கும் தெரிய வேண்டாம்"

சமீபத்தில் இசைஞானி இளையராஜா கொடுத்த ஒரு பழைய பேட்டியை படிக்க நேர்ந்தது. அவர் அதில் இரண்டு விசயங்கள் சொன்னார்.

சிறுவனாக இருந்தபோது அவருடைய தமையன் சொன்னதால் ஒரு நாள் மேடையில் பாடினார். சபையினர் அப்படி கைதட்டி உற்சாகப்படுத்தினர். அவரால் நம்ப முடியவில்லை. வீடு வந்து படுத்த - போது யோசித்தார். இந்தக் கைதட்டல் யாருக்கு. வேறு யாரோ இசையமைத்த பாடலை அவர் பாடினார். அவருடைய வேலை அந்தப் பாடலை வெளிப்படுத்தியதுதான். உண்மையான பாராட்டு இசையமைத்தவருக்குத்தான் சொந்தம்.

இன்னொரு சம்பவமும் சொன்னார். அவர் முதன்முதலாக இசையமைத்த அன்னக்கிளி திரைப்படம் வெளியாகி ஓடிக்கொண்டிருந்தது. இளையராஜா ஒரு கிராமத்து தெருவில் நடந்துபோனார். ஒரு வீட்டிலிருந்து இளம்பெண் வெளியே சட்டென்று வந்து அடுத்தவீட்டுப் பெண்ணை அழைத்து 'ரேடியோவில் அன்னக்கிளி போகுது' என்று சொல்லிவிட்டு உள்ளே ஓடினார். அந்தப் பெண் அடுத்தவீட்டுக்குச் சொன்னார். அவர் பக்கத்து வீட்டுக்கு என்று அந்தச் செய்தி தெரு எல்லைவரை போய்விட்டது. இளையராஜா நடந்துகொண்டே இருந்தார். ஒவ்வொரு வீட்டு ரேடியோவிலும் அவருடைய பாட்டு ஒலிக்கிறது. அன்று அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிபோல பின்னர் அவருக்கு கிடைத்ததே இல்லை.

1976ம் வருடம் வெளிவந்த அன்னக்கிளி படத்தை நான் பார்த்ததே கிடையாது. ஒருநாள் முடிவுகட்டி உட்கார்ந்து யூட்யூபில் படம் முழுவதையும் பார்த்தேன். அப்பொழுதுதான் அதில் சிவக்குமார் நடித்திருப்பது தெரிந்தது. அவருடன் சுஜாதா, எம்.என்.ராஜம், எஸ்.வி.சுப்பையா, தேங்காய் சீனிவாசன் ஆகியோர் நடித்திருந்தார்கள். இந்த நல்ல படத்தை இத்தனை வருடங்கள் தவற விட்டுவிட்டோமே என்று வருத்தமாக இருந்தது. சிவகுமாருக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பினேன். அடுத்தநாள் காலை அவரே டெலிபோனில் அழைத்தார். நான் அவரிடம் கேட்டேன். இளையராஜா முதன்முறையாக இசையமைத்த அன்னக்கிளி படத்தில் நடித்திருக்கிறீர்கள். இந்த விவரங்கள் கூகிளில் தேடினால் கிடைக்குமா? என்றேன். அவர் 'கூகிளா? நான்தான் கூகிள்' என்றுவிட்டு 45 நிமிடம் பேசினார்.

அன்னக்கிளி படப்பிடிப்பு தெங்குமரக்கடா என்ற குக்கிராமத்தில் நடந்தது. அந்தக் கிராமத்தில் உள்ளவர்களுக்கு சினிமா என்றால் என்னவென்றே தெரியாது. படம் பார்த்தது கிடையாது. சிவக்குமார் என்ற நடிகரை தெரிந்தவர்கள் ஒருவர்கூடக் கிடையாது. முழுக்கிராமமும் வீடுகளைக் காலி செய்து படப்பிடிப்பு குழுவினருக்கு கொடுத்துவிட்டு வேறு இடங்களில் தங்கினார்கள்.

சிவக்குமார் வெளியூரிலிருந்து அந்தக் கிராமத்துக்கு புதிதாக படிப்பிக்க வரும் ஒரு வாத்தியார். சுஜாதா அந்தக் கிராமத்து மருத்துவச்சி. சிவக்குமார் ஆற்றின் கரையில் உட்கார்ந்து செம்பிலே தண்ணீரை நிறைத்து அள்ளிக் குளிப்பார். சுஜாதா சிரிசிரி என்று சிரிப்பார். சிவக்குமார், கிராமத்து வாழ்க்கையை அவளிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக கற்பார். மெல்லிய காதல் மலர்கிறது. சிவக்குமாருக்கு மணமுடிக்கக் காத்திருக்கும் ஒரு அக்கா இருக்கிறார். சிவக்குமார்தான் அக்காவுக்கு மணமுடித்து வைக்கவேண்டும். அந்த ஊர் பண்ணையாரின் மகளைக் கட்டினால் அக்காவின் கல்யாணம் சுலபமாக நிறைவேறும். சிவக்குமார் தன் காதலை தியாகம் செய்துவிட்டு பண்ணையாரின் மகளை மணமுடிக்கிறார். அக்காவுக்கும் திருமணம் நடக்கிறது. சுஜாதாவின் காதல் தோல்வியடைகிறது. கதை அப்படிப் போகும்.



இளையராஜாவின் 'அன்னக்கிளி உன்னைத் தேடுதே', 'மச்சானை பார்த்தீங்களா', 'சுத்தச் சம்பா நெல்லுக் குத்தி', 'சொந்தமில்ல பந்தமில்லை' பாடல்கள் படத்தின் வெற்றியை உறுதி செய்தன. படம் வெளிவர - முன்னரே பாடல்கள் பிரபலமாகி பட்டிதொட்டியெல்லாம் ஒலித்தன.

முதல் மூன்று நாட்களும் படம் ஓடவே இல்லை. இயக்குநர் தேவராஜ் தலையில் கைவைத்து அழாத குறை. நாலாவது நாள் படம் பிய்த்துக்கொண்டு ஓடத்தொடங்கியது. ஒருவருமே எதிர்பார்க்கவில்லை. 80 நாள், 100 நாள், 130 நாள் என்று தியேட்டர்களில் படம் ஓடியது. எக்கச்சக்கமான ரசிகர் கூட்டம். இடையிலே ஒரு சின்னப் பிரச்சனை. 'சொந்தமில்லை பந்தமில்லை' என்ற பாடலை சேர்க்காமல்தான் படம் வெளிவந்திருந்தது. ஆனால் அந்தப் பாடல் இசைத்தட்டாக வெளிவந்து பிரபலமாகிவிட்டது. ரசிகர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். மறுபடியும் அந்தப் பாடலைச் சேர்த்து படத்தை வெளியிட நேர்ந்தது.

படத்தில் நடித்த சுஜாதாவுக்கு பெரும் புகழ் கிடைத்தது. மிகச் சிறந்த கதாநாயகி என்று பெயரெடுத்தார். பாலச்சந்தரின் இயக்கத்தில் பல படங்கள் நடித்தார். தமிழகத்தின் உச்ச நட்சத்திரங்கள் எல்லோருடனும் நடிக்கும் வாய்ப்பு கிட்டியது. இந்தப் படத்தில் உள்ள விசேடம் இது இளையராஜாவுக்கு புகழ் சேர்த்தது. சுஜாதாவை நட்சத்திர நடிகையாக உயர்த்தியது. சிவக்குமாரின் கதாநாயக அந்தஸ்தை நிரந்தரமாக்கியது. எஸ்.ஜானகியை முதன்முதலாக அறிமுகப்படுத்தியது.

மற்றவர்கள் அறியாத ஒரு விசயத்தையும் சிவக்குமார் சொன்னார். படப்பிடிப்பு முடிந்த கடைசி நாள் சிவக்குமாரிடம் சுஜாதா இப்படிச் சொன்னார். 'இந்தப் படம் நல்லாய் போகக்கூடாது சார். போனா என்னைத் திரும்ப பல படங்களுக்கு புக் பண்ண வந்திடுவாங்க. நான் தொடர்ந்து நடிக்கவேண்டி வரும். இந்தச் சித்திர - வதையை என்னால் தாங்கமுடியாது. என்னுடைய கடந்த காலத்தை கேட்காமல் என்னை கட்டிக்கத் தயார் என்று வரும் குருவிக்காரனையோ, கிளி ஜோசியக்காரனையோ நான் பேசாமல் கட்டிக்கொண்டு போகத் தயார். என்னை பணம் காய்க்கிற மரமாகத்தான் வீட்டிலே பார்க்கிறாங்க. நான் பலதடவை தற்கொலை செய்ய நினைத்திருக்கிறேன்.'

புறநானூறில் ஒரு பாடல் உண்டு. பரிசு கொடுக்காத மன்னரைப் பார்த்து புலவர் சொல்லுவார். மன்னா, நீ பரிசு தராதது பற்றிக் கவலை இல்லை. இது ஒருவருக்கும் தெரியவேண்டாம்.

சுஜாதாவும் சிவக்குமாரிடம் அதைத்தான் சொன்னார்.



வேதநாயகம் தபேந்திரன்

# விருந்துச் சாப்பாடு ஊருக்கு ஊர் தனி ருசி

**1998ம் ஆண்டு -**

மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோயிலில் நண்பர் ஒருவரின் திருமணத்தில் கலந்து கொள்கிறேன்.

திருமணம் முடிய மணமகளின் வீட்டில் மதிய உணவுக்காகச் செல்கின்றோம். Self Serve எனும் சுயமாகப் பரிமாறும் முறை. சில்வர் பிளேட்டில் வெள்ளைக்குத்தரிசிச் சோறு, கோழிக் கறி, மரக்கறிகளை எனது விருப்பத்திற்கு விரும்பிய அளவில் சாப்பிடுகிறேன்.

மாப்பிளை பொம்பிளைக்குரிய பூதாக்கலச் சாப்பாடு இங்கும் மரக்கறிதான். யாழ்ப்பாணத்தில் சைவ சமயத்தை பின்பற்றுவோர் மரக்கறி உணவுகளைத்தான் திருமண நிகழ்வில் வழங்குவார்கள்.

ஆனால் மட்டக்களப்பு, திருகோணமலையைப் பரம்பரையிடமாகக் கொண்டோர் மச்ச உணவுகளை வழங்குவது எனக்குப் புதினமாக இருந்தது. ஆனால் அது அவர்களது பாரம்பரியம். அதற்கும் தனியானதொரு வரலாற்றுப் பின்னணி இருக்கலாம். மச்சச் சாப்பாடு இல்லாமல் கொண்டாட இது என்ன விரதச் சாப்பாடா என்று அங்குள்ளவர்கள் கேட்பார்கள்.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ நண்பர்களது மங்கல நிகழ்வுகள் என்றால் நான் தவறவிட மாட்டேன். மச்சச் சாப்பாடுகளை ஒரு பிடி பிடிக்கலாம் அல்லவா.

**1998ம் ஆண்டு -**

திருகோணமலையில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாகக் கொண்ட கிண்ணியாப் பிரதேச செயலகப்பிரிவில் கடமையாற்றிக் கொண்டிருக்கிறேன். திருமண நிகழ்வு ஒன்றுக்குச் செல்கிறேன். மணவறையில் கோட் சூட் அணிந்து மாப்பிளை மட்டும் தனியாக இருக்கின்றார்.



பள்ளிவாயலில் சமயப் பணியாற்றும் ஹத்தீப் அல்லது உலமா என்பவர் இஸ்லாமிய சமயாசாரப்படி திருமணப்பதிவை நடத்துகின்றார். மணமகளின் தந்தையார் மணமகனுக்கு அடுத்ததாக திருமணப் பதிவுப்பத்திரத்தில் கையெழுத்து இடுகின்றார். திருமண ஒப்பந்தம் நிறைவேறியதும் மதிய உணவு.

சஹன் எனப்படும் வட்ட வடிவமான சில்வர் தட்டு முன்பாக நான்கு பேராக அமர்ந்திருந்தார்கள். நடுவே சோறுபோட்டார்கள். அதனை ஒவ்வொருவரும் தமது வலது கையால் தமது பக்கத்திற்கென அள்ளி எடுத்தார்கள். தொடர்ந்து கறிகள் போடப்பட அப்படியே எடுத்துச் சாப்பிட்டார்கள். சகோதரத்துவத்தைக் குறித்த உணவு உண்ணும் முறையே அது.

எமக்குத் தனித் தனிப் பிளேட்டுகளில் சோறு கறிகளைப் பரிமாறப்போவதாகக் கூறினார்கள். வேண்டாம் வேண்டாம், எமக்கும் அவ்வாறு உணவு தாருங்கள் என்றோம். தந்தார்கள். நாமும் சகோதரத்துவமாக உண்டோம். புதியதொரு மகிழ்வான அனுபவம்.

**1999ம் ஆண்டு -**

மூதூர் கட்டைபறிச்சானில் உள்ள எனது நண்பரின் திருமணத்திற்குச் செல்கிறேன். மணமகள் வீட்டில் திருமணம். தாலி கட்டுதல் உட்பட சடங்கு சம்பிரதாயங்கள் நிறைவெய்துகின்றன. மதிய உணவு சில்வர் பிளேட்டில் வருகிறது. வெள்ளைக்குத்தரிசிச் சோறு, ஆட்டிறைச்சிக் கறி, பருப்புக்கறி, கரட் சம்பல், கத்தரிக்காய் கறியுடன்கூடிய சுவையான உணவு. ஒரு பிடி பிடித்தேன். இரண்டாம் முறை சோறு தருவார்கள் வாங்கிச் சாப்பிடலாமென நினைக்கிறேன். ஆனால் ஒருவர் வந்து சாப்பிட்ட பிளேட்டைத் தாருங்கள் எனக் கேட்டார். எனக்குச் சோறு போடுங்கள் சாப்பிடப்போகிறேன் என்றேன்.

வேறொரு பிளேட் தருகிறோம். அதில் சாப்பிடலாமென்றார். இதென்னடா புதினமாக உள்ளது என நினைத்துப் பிளேட்டைக் கொடுத்தேன். உடனேயே சாப்பிட்ட கை கழுவ ஒருவர் செம்பும் பிளாஸ்ரிக் பாத்திரமும் கொண்டுவந்தார். கைகளைக்கழுவினேன்.

இன்னொருவர் சில்வர் பிளேட்டுகள் கொண்டு வந்து ஒவ்வொருவராகக் கொடுத்துக்கொண்டு போனார். இன்னொருவர் சுடச் சுட சம்பா அரிசிச் சோற்றைப் போட்டுக்கொண்டு வர இன்னொருவர் கட்டித் தயிரை கரண்டியால் வெட்டிச் சுடுசோற்றினுள் போட்டுக்கொண்டு போனார். இன்னொருவர் சீனியைப் போட இன்னொருவர் கனிந்த இதரை வாழைப்பழத்தை உரித்துப் போட்டுக் கொண்டுபோனார்.

சுடு சோற்றில் தயிரையும் வாழைப்பழத்தையும் சீனியையும் சேர்த்துக் குழைத்துச் சாப்பிட்டோம். உண்மையில் அது தேவார்மிதமாகத்தான் இருந்தது. விருந்தினர்களுக்குத்தான் மச்சச்சாப்பாடு. ஆனால் மாப்பிளை பொம்பிளைக்கு ஏழுவகை மரக்கறிகள் உள்ள பூதாக்கலம்தான் உணவு. பூதாக்கலம் என்பது மணமக்கள் ஒரே வாழையிலையில் ஒன்றாக உணவருந்துவதாகும்.

**2002ம் ஆண்டு -**

தம்பலகமம் பிரதேச செயலகத்தில் கடமையாற்றுகிறேன். பிரதேச செயலர் விஜேசூரிய சேரின் மகனது திருமண நிகழ்வுக்காக கலேவெல எனும் ஊருக்குச் செல்கின்றோம். மாப்பிளை, பொம்பிளை கண்டிய ராஜ பரம்பரை முறையில் திருமண உடையணிந்து இருந்தனர்.
திருமண நிகழ்வு முடிந்ததும் விருந்து. அங்கு இரு பிரிவாக உபசரணை நடக்கின்றது.

சிறியதொரு ஹோலில் உற்சாக போத்தல்கள், அதற்குரிய பைற்சுகள் வெள்ளமாகக் கரை புரண்டு ஓடுகிறது. சில இலட்சம் ரூபா செலவு தாண்டும் போல இருந்தது. தகப்பன், மகன் வித்தியாசமில்லாமல் சந்தோசத்தில் மிதக்கிறார்கள்.

அவர்களது வாழ்க்கை முறையைப் பார்க்கும் போது பொறாமையாக இருந்தது.

(30ஆம் பக்கம் வருக)



முனைவர் பால. சிவகடாட்சம்

# ஆளுமையின் இலக்கணம்

41

மிகவும் வறிய புலவர் அவர். அவரை நம்பி வந்த அந்த இளம் மங்கையைக் காப்பாற்றும் பொறுப்பும் அவருடையது. நகை நட்டு என்று ஏதாவது ஒன்று வாங்கிக் கொடுக்க முடியாவிட்டாலும் அவளுக்குப் போதிய உணவாவது கொடுக்கவேண்டியது அவரது கடமை. பாடிப் பரிசு பெறுவதையே தொழிலாகக் கொண்ட புலவர் பாண்டிய மன்னனைத் தேடி அவனது அரண்மனைக்கே வந்துவிட்டார்.

அரசனுக்கோ இந்தப் புலவருக்கு ஏதாவது கொடுத்தனுப்புவோம் என்னும் எண்ணம் துளியும் கிடையாது. புலவரை நேரில் சந்திக்கும்போது இல்லை என்று சொல்லி அவரை அனுப்பிவிடவும் முடியாது. இந்தப் புலவர் வந்தால் உள்ளே விட்டுவிடாதே என்று வாயில் காப்போனிடம் சொல்லி வைத்திருந்தான் போலும்.

அரண்மனை வாயிற்கதவு வரை பலமுறையும் வந்த புலவரை வாயில் காப்போன் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. இன்று போய் நாளை வா என்று சொல்லிச் சொல்லியே அவரை அலைக்கழித்தான். புலவருக்கு விளங்கிவிட்டது. அரசனுக்குத் தெரியாமல் இது நடப்பது சாத்தியம் இல்லையே. "சரி. நான் போகின்றேன். நீ நிம்மதியாக வாழ்ந்துகொள்" என்று மன்னனிடம் கூறிவிட்டுப் போவதுபோல் அமைந்துள்ளது இப்பாடல். (முதலில் வருவது வழக்கம்போல் எனது தமிழில்)

இயலும்போது தருவோம் என்பதும்
இயலாதபோது இல்லை என்று மறுப்பதும் தான்
ஓர் ஆளுமையின் இலக்கணம்
இயலாத போது தருவேன் என்பதும்
இருக்கும்போது இல்லையென்பதும்
இரப்போருக்குத் துன்பத்தைக் கொடுப்பது மட்டுமன்றி
கொடுப்போரின் புகழுக்கும் குறைவை ஏற்படுத்தும்,
போகட்டும்
இனி இதுதான் எனக்கு என்றாகிவிட்டது
இதுவரை காணாத ஒரு நிலையை இன்று நான் கண்டேன்
உன் புதல்வர் நோயின்றி வாழட்டும்
வெய்யில் என்று நான் வெறுப்பது இல்லை
பனியென்று முடங்குவது இல்லை
கல் அடுக்கு போன்று காற்றின் மறைப்பாக
இருக்கும் என் வறிய இல்லத்தில்
நாணம் ஒன்றைத் தவிர நகை எதுவும் அணியாத
கற்பின் மனையாள் அந்த இளம்பெண்ணை
நினைத்துக்கொண்டு போகின்றேன்
உனது நாள் நன்னாளாகட்டும்.

இந்தப் பாடலில் உணர்வுபூர்வமாக வெளிப்படும் புலவரின் உள்ளக் குமுறலையும் கையறுநிலையையும் முழுமையாகத் தரிசிக்க முடிகின்றது.

இப்புலவருக்குக் உதவ மறுத்த மன்னன் பின்னாளில் நோய்வாய்ப்பட்டு மருத்துவர்களின் பராமரிப்பில் உயிர் நீத்தமையினால் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய பாண்டியன் நன்மாறன் என்று அறியப்படுபவன். இம்மன்னனிடம் பரிசு பெற முடியாமல் வருந்திய புலவர் ஆவூர் மூலங்கிழார். புறநானூற்றில் உள்ளது இப்பாடல். இதுவே சங்கத் தமிழ்ப்பாடல்.

ஒல்லுவது ஒல்லும் என்றலும் யாவர்க்கும்
ஒல்லாது இல்லென மறுத்தலும் இரண்டும்
ஆள்வினை மருங்கின் கேண்மைப் பாலே
ஒல்லாது ஒல்லும் என்றலும் ஒல்லுவது
இல்லென மறுத்தலும் இரண்டும் வல்லே
இரப்போர் வாட்டல் அன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயில் அத்தை
அனைத்தா கியர்இனி இதுவே எனைத்தும்
சேய்த்துக் காணாது கண்டனம் அதனான்
நோயிலர் ஆகநின் புதல்வர் யானும்
வெயிலென முனியேன் பனியென மடியேன்
கல்குயின் றன்னஎன் நல்கூர் வளிமறை
நாணலது இல்லாக் கற்பின் வாள்நுதல்
மெல்லியல் குறுமகள் உள்ளிச்
செல்வல் அத்தை சிறக்க நின்நாளே. (புறநானூறு 196)

## Norms of Nobility

He is a very poor poet. Although he can't afford to buy jewelry it is his responsibility to provide adequate food and shelter for the little girl who has chosen to become his partner in life. Following the path of his contemporary poets he goes in search of donors and kings who are known to support poets by giving them audition and gifts. Once he was at the gates of a king who for some reason failed to show interest in this poet. Although the poet tried many times, the gate keeper refused to allow him to meet the king probably because of his king's instructions. Feeling painfully hurt by this unfair treatment meted out to him the poet sings a farewell poem addressed to the king before returning home.

Promising to give when you have and
Saying no when you don't have
are accepted norms of nobility
Promising to give when there is nothing and
Refusing to give when there is something
not only inflict suffering on the poor
but damage the care giver's reputation
if this is what I get now, let it be so
Today I saw a situation I had never seen before
May your sons live without illness!
I do not hate the hot sun and
I am not afraid of cold either.
I am going back to my deprived home which is
a layer of stone serving as a wind cover,
thinking of my faithful wife,
that delicate young woman who has no jewelry
other than her modesty
Have a nice day!

In this song, one can clearly feel the inner turmoil and desperation being emotionally expressed by the poet Avur Mulankilar.

The Pandiyan king, who refused to help the poet, is Nanmaran who later fell ill and died in sick bed in a healthcare shelter.

நல்கூர் வளிமறை (ஏழைப்புலவரின் கல்வீடு)

# ஞாபகம் துளிர்க்கிறதே! 03



ப. ஸ்ரீஸ்கந்தன்

## சிறுபராய விளையாட்டுகள்

இன்றைய பிள்ளைகள் போல் தன்னந்தனியே கையடக்கமான கருவிகளுடன் அன்று நாங்கள் விளையாடவில்லை. இந்தக் கருவிகள் எதுவும் அப்போது இருக்கவில்லை. எங்களைச் சுற்றி நண்பர்கள், உறவினர்கள் என்று பெரும் கூட்டமே இருந்தது. விளையாடுவதற்கு வெளிகள் இருந்தன. வெறும் வளவுகள், கோயில் வீதிகள், ஒழுங்கைகள் எல்லாம் எமக்காகவே இருந்தன.

சிருஷ்டிக்கப்பட்ட விளையாட்டுகள் இப்போது கருவிகளுக்குள் வந்துவிட்டன. ஆனால், எமது காலத்தில் நிலத்தில் கோடுகள் கீறியும், மரங்களில் கயிறு கட்டியும், கல் - மண் - இலைகள் - புளியங்கொட்டைகள் கொண்டும் நாமே விளையாட்டுகளை உருவாக்கி மகிழ்ச்சியடைவோம்.

எங்கள் கிணற்றடியில் வக்கு என்ற தண்ணீர்த் தொட்டி கட்டுவதற்காக அம்மா குறுமணல் பறித்திருந்தார். குறுமணலில் நாங்கள் வீடு கட்டி விளையாடினோம். சின்ன வயதிலும் நண்பர் கிருபாவுக்கு நல்ல கலைஞானம் இருந்தது. ஒருநாள் காலையிலிருந்து சிறிது சிறிதாக மண்ணில் அழகான ஒரு கோட்டை கட்டினான். சுற்றிவர அகழி கட்டி அதற்குள் தண்ணீர் விட்டான். மூலைகளில் பீரங்கிகளை நிறுத்தினான். கோட்டை கட்டி முடிய மாலையாகி விட்டது. ஆதித்தன் அண்ணை ஓடிவந்தவாறு 'விலத்துங்கோடா' என்றபடி குறுமண்ணில் நீளப் பாய்ந்தார். கோட்டை சுக்கு நூறாகியது. கிருபா அழுதுகொண்டு வீட்டுக்குப் போனான்.



எங்கள் வீட்டுக் கோடிக்குள் ஒரு கோயில் கட்டினோம். மாமி வீட்டு விளாத்திக்குக் கீழ் கட்டிய கோயில் கொஞ்சம் பெரிசு. உள்ளே ஒரு ஆள் நிற்கலாம். இங்கு சந்திக்கு சந்தி கோயில் எழும்போதெல்லாம் எங்கள் சிறுபிள்ளை விளையாட்டை நான் நினைப்பதுண்டு. சுவாமி, விளக்கு, வாகனங்கள் எல்லாவற்றையும் மண்ணால் செய்தோம். தென்னங் குரும்பைகள், தடிகள் கொண்டு தேர் கட்டி இழுத்தோம். கொஞ்சம் சிவலையாகத் தொப்பையுடன் இருந்ததால் தம்பி மதி ஐயராக பூவரசம் இலையைப் பிடுங்கி குமார் நாதஸ்வரம் ஊதுவார். நான் அலுமினியச் சட்டியில் மேளம். இப்போது கோயில்களில் நடப்பதுபோல் அல்லாமல் எங்கள் கோயில் திருவிழாக்கள் ஒற்றுமையாக நடந்தன.

கமுகு மரம் எங்கள் வீட்டில் இருந்தது. நிறைய பாக்கு காய்க்கும். பாக்குவெட்டியால் ஆச்சி அந்தப் பாக்குகளை வெட்டும் அழகே தனி. கமுகின் ஒலை நீளமாகவும், திடமாகவும் இருந்தது. அந்த ஒலையே எங்கள் பஸ் வண்டி. வளவு முழுவதும் தடிகளை நட்டு தரிப்பிடங்கள் செய்து ஒலையில் தம்பிமார்களை இருத்தி இழுத்துச் செல்வோம். வழியில் பள்ளம் தோண்டி, குறுக்கே பலகைகள் போட்டு அதுக்கு மேலால் பஸ் போகும். இதுதான் பாலம்.

ஒரு காலத்தில் சைக்கிள் றிம் ஒன்றைத் தடியால் உருட்டிக் கொண்டு திரிவது பிரபல்யமாக இருந்தது. வேகமாக உருட்டுதல், வளைந்து வளைந்து ஓட்டுதல், பிறேக் பிடிப்பது என்று றிம் ஓட்டுவது அற்புதமான கலை. அப்போது இரவில் படுக்கும்போதும் எனக்குப் பக்கத்தில் அந்தத் தடி இருக்கும். விடிய எழும்பியதும் றிம்முடன் ஓடத் தொடங்கிவிடுவேன்.

பின்னர் முன் வீட்டு குணரட்னம் அண்ணையின் சைக்கிளைக் கெஞ்சிக் கேட்டு வாங்கி ஒரு காலை சைக்கிள் பெடலில் வைத்து, மறு காலால் நிலத்தை உந்தி உந்தி சைக்கிள் ஓடினேன். அப்படியே ஒருநாள் மற்றக் காலை பாருக்குக் கீழால் விட்டு அடுத்த பெடலில் போட்டு ஓடத் தொடங்கினேன். சாதனை நிகழ்த்திய சந்தோசம் எனக்கு. சொந்தமாக ஒரு சைக்கிள் வாங்குவதற்கு நான் வடமாகாண எட்டாம் வகுப்புச் சோதனையில் (என்.பி.ரி.ஏ) நல்ல பெறுபேறை பெறவேண்டியிருந்தது.

குலம் மாமா எங்களுக்கு பாண்டி என்ற விளையாட்டைச் சொல்லிக் கொடுத்தார். நிலத்தில் பத்துக் குழிகள் செய்து அதற்குள் புளியங்கொட்டைகளைப் போட்டு விளையாடுவது இது. எதிர் எதிராக இருந்தவாறு மிகவும் அவதானமாக விளையாட வேண்டும்.

அந்நாளில் மாபிள் என்ற போளை அடி போற வாற இடங்கள், வீதிக்கரைகள் என எல்லா இடங்களிலும் நடக்கும். அப்போது யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இருந்த டயரம்ஸ் போன்ற ஒரு சில கடைகளிலேயே மாபிள்கள் விற்கப்பட்டன. ஒரு குழியும் இரு கோடுகளும் போதும் அளவுக்கான இடம் போதுமானதாக இருந்தாலும் மாபிள் விளையாட்டுக்கும் பல விதிமுறைகள் இருந்தன. சம்பந்தன் குறி வைத்து அடித்தான் என்றால் மாபிள் இரண்டாகப் பிளக்கும்.

கிட்டிப்புள்ளு விளையாட பெரிய இடம் வேண்டும். கிட்டி ஒன்றரை அடியும், புள்ளு நாலு அங்குல நீளமுமான தடிகள். அநேகமாக அவை புன்னை மரத்தடிகளாக இருக்கும். ஒரு சிறிய குழியில் புள்ளுத் தடியை வைத்து கிட்டியால் கிண்டி வீச வேண்டும். சுற்றி நிற்பவர்கள் புள்ளை கட்ச் செய்தால் ஆள் அவுட். இல்லையெனில் குழியை நோக்கி புள்ளை எறிய வேண்டும். அது குழிக்குள் விழாமல் கிட்டியால் விசிறிக் கொண்டிருப்பார் அடித்தவர். இப்படித்தான் விளையாட்டு ஆரம்பமாகும். கிட்டியால் அளத்தல், புள்ளால் அளத்தல், குத்துப் புள்ளு என இவ்விளையாட்டு நீளும். கதிர் அண்ணை விளையாடினால் புள்ளு விண் கூவிக் கொண்டு பறக்கும்.

இப்படி பொடியள் நாங்கள் பலவேறு விளையாட்டுகளை விளையாடிக் கொண்டிருக்க எங்கள் அக்காமார் தாயம், எட்டுக்கோடு, கெந்திப் பிடித்தல், வாரோட்டம் என தங்கள் விளையாட்டுகளில் ஈடுபடுவார்கள். எட்டுக்கோடு பெண்களின் விளையாட்டு என்று எங்களைச் சேர்க்க மாட்டார்கள். எட்டுக்கோடு தாண்டுதல் சுலபமான விளையாட்டல்ல. நிலத்தில் கீறப்பட்ட எட்டுச் சதுரங்களையும் கோடுகளை மிதிக்காமல் ஒற்றைக் காலால் துள்ளித் துள்ளி தாண்ட வேண்டும். அதுவும் சிறிய கல்லொன்றை கையில் வைத்து கையை நீட்டியவாறு அல்லது தலையில் வைத்து அல்லது கால் விரல்கள்மேல் வைத்தவாறு அது கீழே விழாமல் தாண்ட வேண்டும். கெந்திப் பிடிப்பதில் எங்களின் முன்வீட்டுக் கமலா அக்காவை யாரும் வெல்ல முடியாது. காற்றைக் கிழித்தபடி படுவேகமாக கெந்துவார்.

நாங்கள் கொஞ்சம் வளர்ந்த பின்னர் தென்னம்மட்டையால் கிறிக்கட் விளையாடியது, பந்துக்குள் வைக்கோல் அடைச்சு புட்போல் அடிச்சது என்று கதைகள் நிறையவுண்டு. அது சரி, எங்கள் சிறுபராயத்து விளையாட்டுகளை இப்போது யாராவது விளையாடுகிறார்களா?

# இங்கிலாந்தின் கனவை தகர்த்தது இத்தாலி!



எஸ். கணேஷ்

## EURO - 2020

இங்கிலாந்தில் லண்டன் வெம்பிளியில் நடைபெற்ற யூரோ கிண்ண கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில், இங்கிலாந்து எதிர்பார்த்த சம்பியன் கனவை தகர்த்த இத்தாலி பெனால்டி அடி (Penalty Kick - PK) மூலம் 3-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இதனால் இரண்டாம் முறையாக இத்தாலி யூரோ சம்பியன் ஆகியுள்ளது. 1966ல் உலக கிண்ண வெற்றிக்குப் பின்னர் ஒரு பெரிய கிண்ணத்தை வெல்லும் இங்கிலாந்தின் கனவும், இத்தனை போட்டிகளில் மேற்கொண்ட கடின உழைப்பும் இறுதியில் வீணாகிப் போனது. முழு நேர ஆட்டம் கூடுதல் நேரத்துக்குச் சென்றும் 1 - 1 என்ற இழுபறியில் வெற்றி தோல்வியை காண முடியாதிருந்தது. இதனால் ஆட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர இரு அணிகளுக்கும் பெனால்டி சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இத்தாலியின் சிங்கம் என வர்ணிக்கப்படும் கோல் காப்பாளர் கியான்லுகி டோனரூமா இங்கிலாந்து அடித்த இரண்டு பெனால்டிகளையும் தடுத்து விட்டார்.

ஆட்டம் தொடங்கிய இரண்டாவது நிமிடத்தில் இங்கிலாந்தின் லூக்ஷா பிரமாதமாக ஒரு கோலைப் போட்டு தமது அணிக்கு வெற்றிக் கனவை அளித்தார். இங்கிலாந்து முதல் பாதிவரை 1-0 என்ற முன்னிலையில் நின்றது. அதுவரை இத்தாலியால் ஒரு கோல்கூட போட முடியாதிருந்தது. இடைவேளைக்குப் பின்னர் ஆட்டத்தை உக்கிரப்படுத்தியது இத்தாலி. 67வது நிமிடத்தில் இத்தாலியின் வீரர் போனுக்கி ஒரு கோலை அடித்து நிலைமையை சமன் செய்தார்.

இதன் பின்னர் நேர நீடிப்பு வழங்கப்பட்டும் இரு அணியினரும் மேலதிக கோலை போடவில்லை. இதனால் பெனால்டி முறையில் வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் நிலைமை ஏற்பட்டது.

1976ல் செக்கொசிலவாக்கியா அணி ஜேர்மனியை பெனால்டி அடியில் (PK) வீழ்த்திய பிறகு யூரோ கிண்ண இறுதிப் போட்டி இதே முறைக்குத் தீர்மானிக்கப்பட்டது. 2000 மற்றும் 2012ம் ஆண்டு யூரோ கிண்ண இறுதிப் போட்டிகளில் தோல்விகளைச் சந்தித்த இத்தாலி இம்முறை வெற்றியை முழுமையாகக் கொண்டாட்டமாக்கிக் கொண்டது.

இங்கிலாந்தின் 67,000 ரசிகர்களும் தங்களுடைய சொந்த மண்ணில் இங்கிலாந்து கண்ட தோல்வியால் வெதும்பினர். இத்துயரம் பல நாட்களாக அங்கு காணப்பட்டது.

2020 யூரோ கிண்ண தொடரின் நாயகனாகவும் இத்தாலியின் கோல் காப்பாளர் கியான்லுகி டோனரூமா தெரிவானார். அரை இறுதிப் போட்டியில் ஸ்பெயின் வீரர் அல்வரோவின் பெனால்டி அடியைத் தடுத்து இத்தாலியை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்றார். இதே போன்று இறுதிப் போட்டியில் இங்கிலாந்தின் ஜேடன் சாங்கோ, புகாயோ சாக்கோ ஆகியோரின் பெனால்டி அடிகளை தடுத்து இத்தாலியின் வெற்றியை உறுதி செய்தார்.

1996ம் ஆண்டின் ஜேர்மனியின் மத்தியாஸ் சாமர், 2000ம் ஆண்டின் பிரான்ஸ் நாட்டின் ஜினடைன் ஜிடேன், கிறிஸ் நாட்டின் தியோ சாக்கிரட்டீஸ், 2012ல் இலியெஸ்ரா, 2016ல் பிரான்சின் கிரேஸ்மன் ஆகியோர் வரிசையில் டோனரூமா 2020ன் தொடர் நாயகன் விருதை பெற்றுள்ளார்.




யூரோ 2020 'Golden Boots' விருதை போர்த்துக்கல் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ பெற்றுள்ளார். முதன்முறையாக இப்போட்டியில் ஐந்து கோல்கள் இவர் போட்டதால் இவ்விருது கிடைத்தது. இந்தத் தொடரில் ஒவ்வொரு போட்டிகளிலும் இவர் ஹங்கேரி பிரான்சுக்கு எதிராக தலா இரண்டு கோல்களை அடித்தார். ஆனால், இறுதிச் சுற்றில் பெல்ஜியம் அணிக்கு எதிராக றொனால்டோ கோல் அடிக்காமல் ஏமாற்றி விட்டார். இவருக்கு அடுத்தபடியாக இங்கிலாந்தின் அணித்தலைவர் ஹாரிகேன் நான்கு கோல்கள் அடித்தார். இத்தாலிக்கு எதிரான இறுதிப் போட்டியில் இவர் ஒரு கோல் அடித்திருந்தால் 'Golden Boots' விருதைப் பெற்றிருப்பார்.


நடந்து முடிந்த யூரோ கிண்ணத்தில் நான்கு முறை பெனால்டி அடி மூலம் முடிவு தீர்மானிக்கப்பட்டது. குறிப்பாக இந்த முறையில் அடிக்கப்படும் காட்சி பார்ப்பவர்களை உற்சாகமூட்டுவது.


இறுதிப் போட்டியில் பெனால்டி அடி மூலம் 3-2 என்ற எண்ணிக்கையில் இத்தாலி வென்றது. முதலாவது கோலைப் போட்ட பின்னர் இங்கிலாந்து அணி விளையாட்டில் மிகவும் பின்னடைந்து காணப்பட்டது. பல கோல்களைப் போடும் வாய்ப்பை இழந்திருந்தது. இங்கிலாந்து அணி சார்பில் விளையாடிய சில கறுப்பின வீரர்களால்தான் இங்கிலாந்து தோல்வி கண்டது என்ற அபாண்டமான குற்றச்சாட்டு இனரீதியில் பரப்பப்பட்டு வருகின்றது.

அந்நாட்டின் பிரதமர் ஜோன்சன் இதனை வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் எங்கள் வீரர்களை இனரீதியாக எவரும் பிரித்துப் பார்க்கக்கூடாது என்றும் தெரிவித்துள்ளார். உலக உதைபந்தாட்ட சம்மேளமும் இனரீதியான கருத்துகளுக்கு வன்மையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.■

# நீண்டகாலக் கனவொன்று நனவாகிறது !

## ரொறன்ரோவில் தமிழர் சமூக மையம் கனடிய அரசுகள் 26.3 மில்லியன் டாலர் நிதியுதவி





ரொறன்ரோவின் ஸ்காபரோ நகரில் 311 ஸ்ரெய்ன்ஸ் வீதியில் அமையவிருக்கும் தமிழர் சமூக மையத்தின் நிர்மாணப் பணிக்கு கனடிய மத்திய அரசு 14.3 மில்லியன் டாலரையும், ஒன்ராறியோ மாகாண அரசு 11.9 மில்லியன் டாலரையும் வழங்கவுள்ளன. இதற்காக 25 மில்லியன் டாலர் பெறுமதியான காணியை ரொறன்ரோ நகரசபை வழங்கியுள்ளது.


இந்த நிதிப் பங்களிப்புகளை அறிவிப்பதற்கான உத்தியோகபூர்வ நிகழ்வு, சமூக மையம் அமையவுள்ள காணியில் கடந்த மாதம் 16ம் திகதி காலையில் இடம்பெற்றது.

கனடிய மத்திய அரசு சார்பில் துணைப் பிரதமரும் நிதியமைச்சருமான கிறிஸ்டியா ஃபிரீலான்ட், ஒன்ராறியோ மாகாண அரசாங்க முதலமைச்சர் டக் ஃபோர்ட், ரொறன்ரோ நகரசபை சார்பில் மேயர் ஜோன் ரோறி ஆகியோர் தங்கள் பங்களிப்பை இந்நிகழ்வில் அறிவித்தனர். இக்கட்டிடத்துக்கான 9.6 மில்லியன் டாலர்களை தமிழர் சமூகம் பொறுப்பேற்றுள்ளது. 2019 நவம்பரில் இங்குள்ள தமிழர் சமூக அமைப்புகள் இந்நிதியை வழங்குவதாக உறுதியளித்தன.

இந்த மையத்தை அமைப்பதற்கு 120 தமிழர் சமூக அமைப்புகள் ஒப்புதல் தெரிவித்துள்ளன.

சமூக மைய நிதிப் பங்களிப்பு நிகழ்வில் மத்திய அரசின் அமைச்சர்களான பில் பிளேயர், மேரி எங், ஸ்காபரோ-றூஜ்பார்க் நாடாளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி, ஒன்ராறியோ மாகாண உட்கட்டுமான அமைச்சர் கிங்கா சுர்மா, ஸ்காபரோ-றூஜ்பார்க் மாகாண சபை உறுப்பினர் விஜே தணிகாசலம், இப்பிரதேச நகரசபை உறுப்பினர் மெக் கெல்வி ஆகியோர் உரையாற்றினர். மேலும் பல அரசியற் பிரமுகர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

தமிழர் சமூக மைய செயற்திட்டக் குழுவைச் சேர்ந்த கீர்த்தனா ராங் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார். செயற்திட்டக் குழுவின் தலைவர்களில் ஒருவரான சிவா விமலச்சந்திரனும் மற்றொரு உறுப்பினரான நெட்ரா றொட்றிக்கோவும் நன்றியுரை வழங்கினர். நீதன் சண், விது ராமச்சந்திரன், பாமிலா கேதீஸ்வரன், மருத்துவர்கள் இ.லம்போதரன், வ. சாந்தகுமார் ஆகியோர் செயற்திட்டக் குழுவின் மற்றைய உறுப்பினர்கள். தமிழர் சமூக மையம் தொடர்பான விபரங்களை www.tamilcentre.ca என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம்.■









# நன்றி நவிலல்!



## அரியமலர் (பேபி) நவரத்தினம்

கடந்த மாதம் 15ம் திகதி இயற்கை எய்திய எங்கள் அம்மாவின் மறைவுத் துயரில் பங்கு கொண்டு சகல வழிகளாலும் உதவி புரிந்து எமக்கு ஆறுதலும் தேறுதலும் கூறிய உறவினர்கள், உற்றார்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தனித்தனியாக நன்றி கூற முடியாமைக்கு வருந்துகிறோம்.

யாழ். தெல்லிப்பளை வருத்தலைவிளானை (தேன்கிரான்) பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கோவில் வீதியை வதிவிடமாகவும் கொண்ட அரியமலர் (பேபி) நவரத்தினம் அவர்கள் காலஞ்சென்ற சுப்பையா, தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா, இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் கந்தையா நவரத்தினத்தின் ( நவரத்தினம் ஸ்ரோர் உரிமையாளர் - யாழ். புகையிரத நிலைய சந்தி ) அன்பு மனைவியும்,

செல்வநாயகி கந்தையா, சிவஞானவதி சிவகுரு, அன்னபாக்கியம் துரையப்பா, அன்னகுமாரலிங்கம், சரஸ்வதிதேவி தில்லையம்பலம், குகஞானவதி சர்வானந்தன், இராசமலர் வன்னியசூரியர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,

கமலாதரன் (இங்கிலாந்து), பாலசிங்கம் (பருத்தித்துறை), அமிர்தகௌரி (திருகோணமலை), கமலவாசன் (கனடா), கமலதாசன் (இங்கிலாந்து), கேதாரகௌரி (யாழ்ப்பாணம்), கமலசிறி (இங்கிலாந்து) ஆகியோரின் அருமைத்தாயாரும்,

ஜெயகௌரி, கமலினி, திருநாவுக்கரசு, கோமதி, தாரா சந்திரிகா, வேலுப்பிள்ளை, சுஜிதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,
மருத்துவர் கேஜன், மாதுமை, சஞ்சீவன், மருத்துவர் பிரியகலா, கீர்த்தனா, நவீனன், வசுமதி, சஜேந்தன், மதுமதி, ஹரிக்ஷன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,
வசுதா, அக்ஷயா, தரணீஷ், ஆதிரன், அனிக்கா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

**தகவல்:**

மகன்- கமலாதரன் (இங்கிலாந்து): 447481292599

மகன்- கமலவாசன் (கனடா): 416-303-7675

மகன்- கமலதாசன் (இங்கிலாந்து): 447983612501

மகன்- கமலசிறி (இங்கிலாந்து): 447951070325

# Markham McNicoll Urgent Care Centre
## (MMUCC)

### எங்கள் புதிய மருத்துவ சேவைகள்!

நோயாளர்கள் தங்கள் வீட்டிலிருந்தோ அல்லது அலுவலகத்திலிருந்தோ நேரலை வழியாக (Virtual Care) மருத்துவரிடம் சிகிச்சை பெறலாம்.

நோயாளர்கள் கணினி மூலமோ அல்லது தொலைபேசி மூலமோ (online booking & book by phone) மருத்துவர் பார்வையிடும் நேரத்தையும் காலத்தையும் பதிவு செய்யலாம்.

வைத்திய கலாநிதி சிந்துலா விஜயா (குடும்ப மருத்துவர்) அவர்களது பதிவு பெற்ற நோயாளர்களும் இந்த சேவைகளைப் பெறமுடியும்.

**மேலதிக விபரங்களுக்கு**

**medcentrehealth.com**

எனும் எங்கள் இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

MEDCENTRE HEALTH

SYNCHRONIZING HEALTH SECTORS

**2901 Markham Road, Unit -11**
**Toronto, ON M1X 0B6**

**Phone: 416-609-3333**



சுயதொழில் செய்வோருக்கான
அங்கவீனக் காப்புறுதி.
மருத்துவ பரிசோதனைகள் தேவையில்லை.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
Ajith Sabaratnam
CRITICAL ILLNESS
RRSP & RESP
DISABILITY INSURANCE
SUPER VISAS
NON-MEDICAL INSURANCE
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
647 401 5800 / 416 439 2800
218 EXPORT BLVD, MISSISSAUGA, SUITE 209-211, L5S 0A7

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community

## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.




### *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

*• Vistation • Funeral & Memorial Service*
*• Reception • Burial • Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை





**Christeen Seevaratnam**
416-258-6759

**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

### *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**

- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


*A caring part of our community*



நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீல்ஸ்
Tel: 647-702-2159
சிங்கப்பூர் நகைகளை மிகக் குறைவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
பழைய தங்க நகைகள் அதிகூடிய விலையில் வாங்கப்படும்.
தங்க நகை அடவு சேவை குறைந்த வட்டி வீதம்
தங்கமகள் சேமிப்பு திட்டத்தில்
இணையும் அனைவருக்கும் $1500
பெறுமதியன நகையை பொற்றுக்கொள்ளமுடியும்
6055 Steeles Ave E Unit C102, Scarborough, ON., M1X 0A7
Telephone: 647-702-2159 / 647-947-2864
NewRanganasJewellery
newranganasjewelhouse.com




AGA
Beauty Skin SPA & Tranning Center
15, Karachi Drive, Unit 5, Markham
On L3S0B5
Body & Face Cream On Sale
Call : 647-716-5252
Defining Beauty with style
Beauty Services
Threading
Waxing
Facial
Hair Cutting
Hair Colouring
Hair Care
Protein Treatment Head
Weight Loss program
bridal
Makeup & Hair style
Henna Designs
Eye Lash Extensions
Skin Tag Removal
Microdermabrasion
Certificate Courses
Hair Styles
Makeup
Bridal
Esthetician Courses
Threading
Waxing
Facial
Hair Care
Hair Colouring
Protein Treatment Head
Eye Lash Extensions
Skin Treatment
Microdermobrasion
Chin Lifting
Saree Wrapping
Saree Blouse Making
2607 Englinton ave east, Unit 4,6,7,
Scarbarough, On M1K2S2


Build Your Dream Home
SABESAN'S CHOICE
உங்கள் அனைத்து வீட்டு வேலைகளிற்கும் அழையுங்கள்.
We build 10,000 sq. feet (minimum) warehouse from 109 dollar per sq. feet.
400 Kilometre per hour Wind resistance.
Termite Proof
Compare traditional Building Energy Savings.
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
Sabesan's Choice
விருது பெற்ற தொழிற்துறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com



வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?
அனுபவசாலிகளின் ஆலோசனை
பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.
MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
Even if the accident is your fault:
Employed • Unemployed
Passenger • Pedestrian
Public transit
cyclist
WE ARE HERE TO
HELP YOU
இலவச ஆலோசனைகளுக்கு:
தீபன்
24 Hours Direct Line
(416) 831-4444
(416) 505-9804
2190 Warden Ave., Suite 202, Toronto, ON M1T 1V6

வீடு | வணிகம்
★ வாங்க ★ விற்க ★ வாடகைக்கு...

Residential | Commercial
★ BUY ★ SELL ★ LEASE

MARKET IS HOT

NOW IS THE TIME TO SELL AT HIGHEST PRICE

வீடுகளை அதிக விலைக்கு விற்க உகந்த தருணம்

HERE ARE SOME PROVEN RESULTS

MLS

112% SOLD OVER ASKING
MIDDLEFILED & FINCH


Bedrooms:2 Washrooms:2

119% SOLD OVER ASKING
MORNINGSIDE & STAINES

Bedrooms:3 Washrooms:3

118% SOLD OVER ASKING
ROSSLAND & CHURCH

Bedrooms:5 + 2 Washrooms:7

106% SOLD OVER ASKING
MIDDLEFILED & FINCH

Bedrooms:2 + 1 Washrooms:2

103% SOLD OVER ASKING
ROSSLAND & CHURCH

Bedrooms: 3+ 1 Washrooms:3



CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com


List Your Property with me...

* FREE Home Evaluation
* FREE Home Staging
* FREE Marketing
* FREE Professional Photography
* Social Media Marketing
* Just Listed & Feature Sheet

HOMELIFE
HomeLife/Future Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977

Dr. Shan A. Shanmugavadivel & Associates

டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

MONDAY - SATURDAY
(416) 266-5161
(Near Kennedy Subway - Rainbow Village Building)

RAINBOW VILLAGE DENTAL OFFICE
2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB



**Benedict Thomas (Benny)**

# Violence in the City

I have previously written a piece on the prevalence of gun violence in Canada, particularly in the city of Toronto. I make no apologies for returning to the same subject as I am deeply concerned with the ever increasing violence in various forms in the city.

Take the case of the shootings at a toddler's birthday party at which three children were injured, one critically. Toddler's birthday party is the last place one would go with a gun to indulge in a crime, but this is what exactly happened at the party. 'Are we living in a dreadful society that has no love for innocent children' is the question we may all ask ourselves now. Apart from hurting the children, there were others at the party screaming and running amok to save themselves. This awesome incident happened at one of the Toronto Community Housing Townhouse Development Units. Long-time residents of the Community Centre are furious that gunplay menace had come to stay into their units. At this particular community centre, there have been at least four previous killings to all of which the authorities had not responded positively.

In this area, there have been not less than 26 shootings during the last ten years. According to Police records, out of the 20 worst single crime locations, all but two have been committed at this Toronto City Housing property or adjacent to it. Naturally, residents do not feel safe enough even to step out of their homes. While gun violence in the city is a general phenomenon that has to be tackled at the national level, there are particular areas in the city where it has become too common, and this needs particular attention at local, provincial and national level. Root causes of the problem have been identified as extreme poverty, lack of education, lack of employment and lack of guidance. While the Police are fully aware of these problems, they cannot solve them on their own without state assistance.

The recent shootings must open the minds of all who are in authority to make genuine efforts to curb gun violence in the city. Peace-loving ordinary citizens must be allowed to lead their normal lives without any hindrance. Let me leave gun violence for a while and comment on two other types of violence that have now emerged in the city. They are stabbings and striking by vehicles. Stabbings are resorted to by youths who do not have access to guns and have become a common occurrence amongst gangs. More vigilance is required on the part of the Police to contain this form of violence. They must intensify their checks to ensure that knives, swords and similar weapons are not in the hands of gangs.

In my recent article titled 'A Horrendous Crime' I wrote about a youth, 20 years old, who deliberately struck a family by his speeding vehicle, killing four of them immediately and critically injuring a 9 years old child. This incident happened in London Ontario, a few weeks ago. Now we have the report of the murder of a respected Police Officer, Det. Constable Jeffrey Northrup, killed by a speeding vehicle in a parking lot. The police officer had gone there to investigate into an incident was greeted by a stranger who straightaway rode his vehicle on to his body and killed him. The whole nation paid tribute to this officer who had served 31 years in the Police Service without any blemish. He leaves behind a family of wife and three teenage children.

As I write this piece, I received news of a 40 year old man chasing two Muslim ladies, a mother and her daughter, who were walking out of Shoppers Drug Mart, with his speeding vehicle and shouting "I am going to kill you". Fortunately, the ladies managed to escape, and the attempted assault failed. He was arrested later with the aid of those who witnessed this incident. It is now revealed that the two ladies happen to be the wife and daughter of an Imam of a Mosque in Hamilton. While gun violence and stabbings can be controlled with positive efforts by the Police, killings using driving vehicles will be difficult almost impossible to control. However, this is a new menace that has now surfaced in the Canadian society and the authorities must take immediate action to eradicate it without allowing it to spread.■



'சிந்தனைப்பூக்கள்' எஸ். பத்மநாதன்

# பெருந்துயில் தரும் பேராபத்து

*"காலையிலே ஒரு மணி நேரத்தைத் தவறவிட்டால், நாள் முழுவதும் அதைத் தேடிக்கொண்டேயிருப்பீர்கள்" - றிச்சாட் வார்ட்லி.*

மனித உடலுக்கு தூக்கம் மிக முக்கியம். ஆனால், அதேயளவுக்கு உரிய நேரத்தில் விழித்தெழுவதும் முக்கியமாகும். வாழ்க்கையில் வெற்றி பெற்ற பலர் அதிகாலையில் எழுந்து செயற்படுபவர்களாக காணப்பட்டுள்ளனர்.

வின்சன்ற் சேர்ச்சில், பெஞ்சமின் ஃபிராங்ளின் ஆகியோர் தொடக்கம் பராக் ஒபாமா வரையில் அதிகாலையில் விழித்தெழுந்து தங்கள் நாளாந்த கடமையை ஆற்றத் தொடங்கியவர்கள். சரியாகச் சிந்தித்தால் அதிகாலையில் விழித்து எழுந்து பணியாற்றத் தொடங்கினால் ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட ஒரு முழுநாள் எமக்கு மேலதிகமாகக் கிடைக்கிறது என்கின்ற உணர்வு ஏற்படும்.

காலை நேரம் என்பது உடற்பயிற்சி செய்வதற்கு, நினைவில் கொள்ள வேண்டிய - வைகளை வாசிப்பதற்கு, புதிதாக ஒன்றை கற்றுக் கொள்வதற்கு, பல நாட்களாக செய்யாமல் தள்ளிப்போட்ட ஏதாவதொன்றைத் தொடங்குவதற்கு உகந்த பொழுது. இன்னும் கொஞ்ச நேரம் தூங்கலாம் என்று தூங்குபவர்கள் பலரும் வாழ்க்கையில் நீண்ட நேரம் தூங்குபவர்களாகவே மாறி விடுவர். மனமும் உடலும் அவர்களை நீண்ட துயிலுக்கே இட்டுச் செல்லும்.

அளவுக்கு மீறித் தூங்குவது எப்போதுமே உடலுக்கு ஆபத்தானது. அதீத தூக்கத்தினை ஆங்கிலத்தில் ஹைப்பர்சொம்னியா என்று அழைப்பர். சொம்னஸ் என்பது ரோமானியர்களின் நித்திரைக்கான கடவுளின் பெயர். அதீத பசி என்பதுபோல் அதீத நித்திரையும் மூளையில் பாதிப்பை ஏற்படுத்தும். மூளையில் உள்ள ஹைப்பதாலமஸ் என்னும் பகுதியே எமது பசி, தூக்கம் என்பவற்றை தீர்மானிக்கிறது. இதனால் ஏற்படக்கூடிய தாக்கத்தினை கிளேய்ன் லெவின் சின்ட்ரோம் என மருத்துவர்கள் கூறுவர். இந்த நோய்க்கு ஆட்படுபவர்கள் இருபது மணித்தியாலம்கூட தூங்குவார்கள்.

சிலர் பேசிக் கொண்டிருக்கும்போது அல்லது நூல்களை வாசிக்கும்போது தூங்கி விடுவார்கள். சிலர் பிரயாணம் செய்யும் வேளையில் இறுதி இடம் வரும்வரைக்கும் தூங்குவார்கள். எல்லாவற்றுக்கும் மூளையின் செயற்பாடே காரணம்.

பகலில்கூட இவர்களால் நின்று தூங்க முடிகிறது. தம்மை ஏதோவொன்று அமுக்குவதாக இவர்கள் கூறுவார்கள். ஆங்கிலத்தில் இதனை நார்கோ லெப்சி என்று கூறுவர். வேண்டுமானால் தமிழில் இதனை அமுக்குவான் எனக்கூறலாம்.

நித்திரையினால் பல பிரச்சனைகள் தூண்டப்படுகின்றன. சிலர் பலமாக குறட்டை விடுவார்கள். மூச்சுக் குந்தகம் சிலருக்கு ஏற்படும். இதனை சிலீப் அப்னியா என்பர். அவர்களை அறியாமலே இந்த நோய் ஏற்படுகிறது.

காலையில் எழ வேண்டுமென்பதற்காக மணிக்கூட்டில் அலாரம் வைத்துவிட்டுப் படுப்பார்கள். அது அடிக்கத் தொடங்கும்போது தங்களை அறியாமலே அதனை நிறுத்திவிட்டு தொடர்ந்தும் தூங்குவார்கள். அதிகாலையில் எழ வேண்டுமென்பதை மூளைக்குப் பழக்கிக் கொடுத்தால் தொடர்ந்தும் அதற்குரிய நேரத்தில் - அலாரம் எதுவும் வைக்காமல் எழமுடியும். நற்பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டால் உடலுக்கும் உள்ளத்துக்கும் நல்லது.


HERITAGE
Education Funds
RESP
SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com

Graphic Land - 647. 219. 7576

உலக உயிரினங்கள் எல்லாம் எழுப்பும் ஓசையைக் காட்டிலும் அதீத ஒலி எழுப்பக் கூடியது திமிங்கிலம். அதற்கு நேர் எதிரானது ஒட்டகச் சிவிங்கி.

திமிங்கிலம் போன்ற ஒருவர் உங்களை ஒட்டகச் சிவிங்கியாய் ஆக்கி ஒரு நொடியும் உங்களைப் பேச விடாமல் மணிக்கணக்கில் பேசிக்கொண்டே இருந்தால் என்ன செய்வீர்கள்?

வாசிப்பதைவிட எழுதுவதையே அதிகம் கொண்டவர், செவிகளே இல்லாமல் வாய் மட்டுமே கொண்ட வினோத விலங்கு. தொலைபேசிகள் ஒலிபெருக்கிகள் அல்ல என்று அறியாத மூர்க்கர்கள்.

உரையாடல்களின் நாகரிகமே உரையாடல்களுக்கு இடையில் சுவையான மௌனத்தை விருந்தாகப் பரிமாறுவதுதான்.

உரையாடலுக்கு இடையில் அவ்வப்போது மௌனம் காப்பதைக் கற்காமல், உரையாட வருவது ஆடையே இல்லாமல் மேடைக்கு வருவதைப் போன்றது. சைத்தானுக்குக் கல்லெறிவதைப்போல சொல்லெறிந்துகொண்டே இருப்பது மனோவியாதி.

மாணவர்களுடன் உரையாடாமல் பேசிக்கொண்டே இருக்கும் ஆசிரியர், ஆசிரியருக்கான எந்தத் தகுதியும் இல்லாதவர்.

எதிர் முனையில் இருப்பவருக்கு தான் பேசுவது புரிகிறதா என்றுகூட அறிய விரும்பாதவர், உங்களுடன் பேசினால் என்ன செய்வீர்கள்?

பெருமூச்சு மட்டுமே விட்டுக்கொண்டிருக்கும் உங்களைத் துளியும் கண்டுகொள்ளாமல் உங்கள் உறவுக்காரர் ஒருவர் உங்களுடன் பேசிக்கொண்டே இருந்தால் என்ன செய்வீர்கள்?

சட்டென்று தொலைபேசியைத் துண்டித்துவிடுவீர்களா? நீ எதையோ பேசு நான் என் வேலையைப் பார்க்கிறேன் என்று கையில் தொலைபேசியைப் பிடித்திருந்தாலும் காதை திசைமாற்றி வேறு பணி செய்வீர்களா?

இந்த இரண்டுமே நாகரிகம் இல்லை என்றால், என்னதான் செய்யவேண்டும்?

செவி மூடியவர்களிடம்
பேச்சு வார்த்தை நடத்துவதும்
செருப்பில்லாமல்
நெருஞ்சி முட்காட்டில் நடப்பதும்
ஒன்றுதான்
---
வாய் திறக்க விடாமல்
குரல் மட்டும் உயர்த்துவதால்



கவிஞர் அ. புகாரி

# ஞானவெளிச் சொர்க்கம்

சாதிக்கப் போவதுதான் என்ன?
புரிந்துணர்வைப் போட்டுப்
புதைப்பதைத்
தவிர
---
கதறி அழுது
சிதறிப்போகும்
நட்பை
நல்ல உறவை
சற்றும் பொருட்படுத்தாமல்
துடித்து வெடிக்கும்
துப்பாக்கி ரவைச் சொற்களுக்கு
வாழ்க்கை அகராதிகளில்
பொருள்தான் என்ன?
பிதற்றிப்
பின்னமும் வைபவத்துக்கு
விழிநீர் சேர்க்கும்
எத்தனம் என்பதைத்
தவிர
---
இடைவிடாமல்
இரு முழு நீள மணி நேரமும்
தொலைபேசியில்
பேசமட்டுமே செய்தான்
அம்முனையில்
சொந்தம் ஒருவன்.

அவன்
குற்றச்சாட்டுக் குத்தீட்டிகளையும்
அறிவில்லா
அறிவுரைத் தோரணங்களையும்
ஏந்திக்கொண்டே
இம்முனையில்
நான்.

ஒரு
நம்பிக்கைதான்.
எனக்கும்
ஒரு வாய்ப்பு திறப்பான்
நானும் பேசலாம்
என
'ரொம்ப நேரமா பேசிட்டோம்
அப்புறம் ஒருநாள்
பேசலாம்"

சட்டெனத் துண்டித்தான்
தொலைபேசிச் சாதுர்யன்.
---
அட
இனி எப்போது
எனை அழைத்துத் தொலைப்பானோ
தன்
செவிகள் இரண்டிலும்
வண்டி வண்டியாய்ப்
பஞ்சுப் பொதிகளேற்றி
இறுக மூடி அடைத்துக்கொண்டு
பெரும் பூட்டொன்றும்
இட்டுத்
தொங்கியும் பார்த்துவிட்டு
தன் வாயை மட்டுமே
அனகொண்டாவாய்
அகலத் திறந்துகொண்டு
பேசப் போகிறானோ
என்று
நிலைகுலைந்து நடுநடுங்கித்
தவிக்கிறது அடிபட்ட
நெஞ்சு
---
கல் விழுந்த
கண்ணாடிக் குடுவைபோல
சில்லுகளாகிச் சிதறிக் கிடக்கும்
எண்ணத் திட்டுகளில்
சட்டென ஒரு பொறி
தாவிப் பற்றுகிறது.
---
சொல்வதை
வாங்குவாங்கென்று
வாங்கி வைத்துக்கொண்டு
மௌனத்தையே
பதிலாகக் கொடுத்தால்தான்
என்ன?

திறக்கும் செவியோடு
என்றாவது வா,
வரும்வரை
வாய்திறவாச் சிப்பியாய்க்
காத்திருப்பதல்லவா
ஞானவெளிச் சொர்க்கம்? ■

# விருந்துச் சாப்பாடு...

( 14ஆம் பக்கத்திலிருந்து )

பலவகை இறைச்சிகள், மீன்வகைகளுடன் அற்புதமான ஒரு மதியஉணவு.

**2012ம் ஆண்டு -**

கிளிநொச்சிக் கடமைக்குச் செல்கிறேன். பூநகரி ஞானிமடப் பிரதேசத்தில் ஒரு வெளிக்கள நிகழ்வு. இரவு தங்கவேண்டிய நிலை. அப்பிரிவின் கிராம அலுவலர் இரவு உணவை ஏற்பாடு செய்தார்.

பனையோலையால் செய்யப்பட்ட தட்டுவத்தில் உணவு பரிமாறினார்கள். தட்டுவம் என்பது கள்ளுக் குடிக்கும் பிளாவை ஒத்த வடிவம். பிளா ஒரு பக்கம் முடிந்து கட்டப்பட்டிருக்கும். ஆனால் தட்டுவம் ஒரு பக்கம் சமனாக இரு இடங்களில் கட்டப்பட்டிருக்கும்.

பூநகரியின் வரலாற்றுப் பெருமை சொல்லும் மொட்டைக் கறுப்பன் அரிசிச்சோறு, மீன் கறி, கணவாய்க்கறி, நண்டுக்கறி, சுறா வறை, இறால் பொரியல், ஒடியல் பிட்டு, பருப்புக் கறி, கரட் சம்பல் என அமர்க்களமான சாப்பாடு. எமது ஸ்மார்ட் போனில் படங்களையும் எடுத்துக் கொண்டு மணக்க மணக்க உண்டோம்.

**2019ம் ஆண்டு -**

திருகோணமலை நகரில் அரச பணியாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எனது நண்பரின் மகளின் சாமத்திய வீடு எனப்படும் மங்கைப் பருவ மங்கல நீராட்டுவிழா. மண்டபமொன்றில் நடைபெற்றது. அறுசுவையுடன் கூடிய மாமிச உணவு. நிகழ்வு முடிந்து திரும்பும் போது எனது நண்பனை ரகசியமாகக் கேட்டேன் “இது என்ன மச்சான் மச்சச் சாப்பாட்டுக்கு மாறிற்றியோ?”

மச்சான் இஞ்சத்த ஆக்கள் மச்சத்தைத்தான் விரும்பிச் சாப்பிடுவினம். அதால நாங்கள் முந்தநாள் எமது வீட்டில் சடங்கு சம்பிரதாயக் கொண்டாட்டங்களைச் செய்தோம். இன்று ஹோலில் யாவருக்கும் கொண்டாட்டச் சாப்பாடு மச்சம். நீ இஞ்ச இருந்த காலம் (1997 -2003) போல இல்ல இப்ப. எங்கட யாழ்ப்பாணத்தாக்களின்ர கலியாணமும் இப்படித்தான் நடக்குது” என்றான். இட மாற்றம் பண்பாட்டுப் பழக்கத்தை மாற்றுகிறது.

இப்படியே ஊருக்கு ஊர் மாறுபட்ட திருமண முறைகள் இருக்கும். ஆனால், எங்கு போனாலும் ஒரு பிடி பிடிக்கலாம்.■


• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •
Scholarship Plan [RESP]
Any Referral Service
JRB Universal Inc.
Almost All Services Available
647 289 6164

R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.
• Credit Counseling • Accounting & Tax Services •







குரு அரவிந்தன்

# பழனி சுப்பிரமணியபிள்ளை 39

பழனி சுப்பிரமணியபிள்ளை தென்னிந்தியாவைச் சேர்ந்த மிருதங்க இசைக் கலைஞர். ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி 1908ம் ஆண்டு தமிழ்நாட்டில் பிறந்த இவரது தந்தையின் பெயர் முத்தையாபிள்ளை. இவரது தாயாரின் பெயர் உண்ணாமலை அம்மாள். இவரது தந்தை முத்தையா பிள்ளையும் ஒரு மிருதங்க இசைக் கலைஞர் என்பதால் அவரிடமிருந்து முதலில் இசையைக் கற்கத் தொடங்கினார். தொடர்ந்து புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி பிள்ளையிடம் மாணவராக இருந்து மிருதங்கம் கற்றார்.

இவர் இளமையிலேயே புகழ்வாய்ந்த பாடகர்களான காஞ்சிபுரம் நாயினாப்பிள்ளை, மழவரயேந்தல் சுப்பராமபாகவதர், முடிகொண்டான் வேங்கடராம ஐயர் ஆகியோருக்கு பக்கவாத்தியமாக மிருதங்கம் வாசித்தார். இராமநாதபுரம் சி.எஸ்.முருகபூபதி, பாலக்காடு மணி ஐயர் ஆகியோர் இவரது சமகாலத்தவர். இவர் கஞ்சிரா வாசிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்தவர். இவரைப் பி.எஸ்.பி என்றும் சுருக்கமாகப் பெயர் சொல்லி அழைப்பர். ராஜம்மாள் என்பவரைத் திருமணம் செய்த இவருக்கு விமலா என்ற ஒரு மகள் உண்டு.

மிருதங்க சக்கரவர்த்தி மணி ஐயரும் பழனியும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் என்பதால் மிருதங்கத்தில் யார் சிறந்தவர்கள் என்ற போட்டி ரசிகர்களிடயே எப்பொழுதும் இருக்குமாம். 'வலது கை மிருதங்க வித்வான்களில் மணி ஐயர் சிறந்தவர், இடது கை வித்வான்களில் பழனி சிறந்தவர்' - என்ற தீர்ப்பைச் சொல்லி நடுவர்கள் சமாளிப்பார்களாம். காரணம் பழனி இடதுகைப் பழக்கம் கொண்டவர். கச்சேரிகளின் போது இதனால் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி வந்தது. மிருதங்கத்திற்குத் தொப்பியா?, தொப்பி என்றால் என்ன என்று நீங்கள் எண்ணக்கூடும். மிருதங்கத்தின் இடந்தலையைத்தான் தொப்பி என்று அழைப்பார்கள். மிருதங்கத்தின் வலந்தலைதான் சுருதியுடன் இசையும் ஒலி எழுப்பக்கூடியது. பொதுவாகக் கச்சேரிகளில் வலது பக்கம் மிருதங்க வித்வானும், இடது பக்கத்தில் வயலின் வித்வானும் அமர்ந்திருப்பார்கள். இடது கைப்பழக்கம் கொண்ட பழனி வாசிக்கும் போது ரசிகர்களுக்காக இடது பக்கத்தில் அவர் அமரவேண்டி வந்தது. இதனால் தங்கள் மதிப்புக்குப் பங்கம் ஏற்படும் என்று நினைத்த சில வயலின் கலைஞர்கள் இடம்மாறி இருப்பதை ஏற்றுக் கொள்ள மறுத்தனர்.



இச்சந்தர்ப்பத்தில் செம்பை வைத்தியநாத பாகவதர் பழனியின் திறமைக்கு முன்னுரிமை கொடுத்து, மேடை நடைமுறைப் பிரச்சனையை தீர்த்து வைத்து இவருக்கு தொடர்ந்தும் தனது கச்சேரிகளில் இடது பக்கம் இருப்பதற்கு வாய்ப்பளித்தார், இதைத் தொடர்ந்து ஏனையவர்களும் பழனியின் மிருதங்க இசைக்கு மதிப்புக் கொடுத்து மேடையைப் பகிர்ந்து கொள்ள முன்வந்தனர்.

மற்றவர்களைப் போலல்லாது, பழனி நிகழ்ச்சிகளில் வாசிக்கும்போது எப்போதாவது சறுக்கல் ஏற்பட்டால், அதை வெளிப்படையாய் காண்பித்து, மீண்டுமொருமுறை முதலில் இருந்து தொடங்கி சரியாக வாசிப்பார். பழனியின் வாசிப்பில், பாடலின் அமைப்பை அப்படியே மிருதங்கத்தில் காட்டுவது போல சங்கதிக்கு சங்கதி வாசிக்காமல், பாடலுக்குப் பொருத்தமான நடைகளையும் சொற்கட்டுகளையுமே பழனி வாசிப்பார். கிருதியின் சில இடங்களின் முக்கியத்துவத்தைக் காண்பிக்க நினைத்தால் மட்டுமே பாடலின் அமைப்பை தன் மிருதங்கத்திலும் வாசித்துக் காண்பிப்பார். கிருதியில் கார்வைகள் உள்ள இடங்கள் வரும் போதும், இட்டு நிரப்பி வாசிப்பதே வித்வான் பழனியின் பாணியாகும்.

செம்பை வைத்தியநாத பாகவதர், ஜி. என். பாலசுப்பிரமணியம், செம்மங்குடி சீனிவாச ஐயர், அரியக்குடி இராமானுஜ ஐயங்கார், மதுரை மணிஐயர், மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர் போன்றவர்களுக்கும், புல்லாங்குழல் கலைஞரான டி. ஆர். மகாலிங்கம் மற்றும் வீணைக் கலைஞரான காரைக்குடி சாம்பசிவஐயர் போன்றோருக்கும் பழனி பக்கவாத்தியம் வாசித்திருக்கிறார். டி. ரங்கநாதன், எம். என். கந்தசாமி, கனடாவில் உள்ள புகழ் பெற்ற மிருதங்க வித்வான் திருச்சி சங்கரன். தண்டமூரி ராம்மோகன் ராவ், பூவாளூர் வெங்கட்ராமன், கே. எஸ். காளிதாஸ், எஸ். சுவாமிநாதன், உடுமலை மயில்சாமி பிள்ளை, ரகு பிரசாத் போன்றவர்கள் இவரிடம் மிருதங்கம் பயின்ற குறிப்பிடத்தக்க மாணவர்களாவார்.

இவரின் மற்றொரு சிறப்பு இவர் தனது தோற்றத்தில் எடுத்துக்கொண்ட கவனமாகும். எப்போதும் வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டை அணிவார். வாசனைப் பொருட்களை விரும்பி உபயோகிப்பார். இவரைப் போலவே பாடகர் ஜி. என். பாலசுப்பிரமணியம், வயலின் வித்துவான் மாயவரம் வி. ஆர். கோவிந்தராஜ பிள்ளை இருவரும் நல்ல தோற்றம் கொண்டவர்களாகவும் வாசனைத் திரவியங்கள் பயன்படுத்துபவர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் மூவரும் சேர்ந்து பங்குபற்றும் கச்சேரிகளின்போது அரங்கில் நறுமணம் கமழும் என்று ரசிகர்கள் குறிப்பிடுவர். அவரது தனிப்பட்ட வாழ்க்கையில், பழனி பெரிய வீட்டின் சொந்தக்காரராகவும், அவ்வப்போது புதிய மோட்டார் வண்டிகளை வாங்கித் தானே ஓட்டுபவராகவும் இருந்தார்.

சிறந்த மிருதங்க இசைக் கலைஞரான இவர், 1962ம் ஆண்டு மே மாதம் 27ம் திகதி தனது 54வது வயதில உலகை விட்டுப் பிரிந்தார்.


Best Catering
நந்தா உணவகம்
NANTHA CATERS
in Town!
நகரில் சுவைகுன்றா உணவுகளுக்கு ஒரே இடம்
416 NANTHA 1 (416 626 8421)
Brimley & Steeles - 4915 Steeles Ave. E.
Warden & Finch -3268 Finch Ave. E.
Kipling & Steeles - 5010 Steeles Ave. E.


உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
On high, with your thoughts
PROMAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
**கேதா**

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்





BRACE FOR A GREAT SMILE

# DR. ILLANGO & ASSOCIATES

ORTHODONTICS, ORAL SURGERY, IMPLANT

Dental Office

**SCARBOROUGH**
**Kennedy / Finch Ave.**
3852 Finch Ave. East
Suite 204 & 303
Scarborough, ON
**Tel: 416–292–7004**

**BRAMPTON / MISSISSAUGA**
**Steeles / Hurontario**
7920 Hurontario Street
Unit # 37
Brampton, ON
**Tel: 905–457–1700**

**MARKHAM**
**Markham / 16th Ave.**
(New Location)
9500 Markham Road
Unit # 107
Markham, ON
**905–47 BRACE (27223)**



டாக்டர் எம்.கே. முருகானந்தன்

# இஞ்சியின் மருத்துவ குணங்கள்

இஞ்சிச் சம்பல், இஞ்சி தேநீர் போன்றவை நாக்கைச் சப்புக் கொட்டிச் சாப்பிடுபவர்கள் பலரின் தேர்வாக இருக்கிறது. இஞ்சிப் பாண் (Garlic bread) சுவை பிரசித்தம் அல்லவா? இஞ்சி போடாத இறைச்சிக் கறி சுவைக்கு உதவாது என்பார்கள் பலர்.

சமிபாடின்மை என்றால் “இஞ்சிச் சோடா கொண்டுவா” என்பார்கள். எமது நாளாந்த பாவனைகள் இவ்வாறிருக்க, சித்த ஆயுர்வேத வைத்திய முறைகளில் இஞ்சியின் பயன்பாடு அதிகம். தடிமன், காய்ச்சல், பசியின்மை, சமிபாட்டுப் பிரச்சனைகள் போன்றவற்றிற்கு இஞ்சி தொன்று தொட்டு பயன்படுத்தப்படுகிறது.

உண்மையில் இஞ்சிக்கு மருத்துவக் குணங்கள் உள்ளனவா? இருப்பின் அவை விஞ்ஞான பூர்வமாக ஏற்கப்பட்ட கருத்துகளா? American Family Physician; 75: 1689-91 இதழில் இஞ்சியின் மருத்துவப் பயன்பாடு பற்றிய பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

கர்ப்பகால மசக்கையின்போது சத்தி, ஓங்காளம் போன்றவை பெருந்தொல்லை கொடுப்பதுண்டு. இந்நேரத்தில் கருவில் வளரும் குழந்தைக்கு மருந்துகளால் ஆபத்து ஏற்படலாம் என்பதால் தேவையற்ற மருந்துகள் கொடுப்பதற்கு மருத்துவர்கள் தயங்குவதுண்டு. இத்தகையவர்களுக்கு எந்த மருந்தும் கொடுக்காமல் இருப்பதைவிட இஞ்சி கொடுப்பது நல்ல பலனைக் கொடுக்கும் என 675 பேரைக் கொண்டு செய்யப்பட்ட வெவ்வேறு ஆய்வுகளில் நான்கு ஆய்வுகள் தெளிவாகக் கூறுகின்றன. அவர்களுக்கு விற்றமின் கொடுக்கும் அதே அளவு பலனை இஞ்சியும் கொடுக்கும் என வேறு ஓர் ஆய்வு கூறுகின்றது.

சத்திர சிகிச்சைகளுக்குப் பின்னர் பலருக்கு ஓங்காளமும் வாந்தியும் ஏற்படுவதுண்டு. மருந்தற்ற மாத்திரைகளை (placbo) விட இஞ்சியானது அவர்களது அறிகுறிகளைக் குறைக்கும் என மற்றுமொரு ஆய்வு கூறுகிறது.

கப்பல் பிரயாணிகள் பலர் கப்பலில் வாந்தி வருவதை நினைத்துப் பயந்தே பிரயாணம் வேண்டாம் என அலறி ஓடுகிறார்கள். பிரயாணங்களின் போது கப்பல் அடங்கலாக வாந்தி வருவதை ஆங்கிலத்தில் motion sickness என்பார்கள். அத்தகைய வாந்திக்கு dimenhydrinate என்ற மருந்தும் பாவனையில் உள்ளது. இஞ்சியானது அந்த மருந்தை விட மேலான ஆற்றல் உள்ளது என மற்றொரு ஆய்வு கூறுகிறது.

ரூமற்வொயிட் மூட்டு வாதம் (Rheumatoid arthiritis) மற்றும் முழங்கால் எலும்புத் தேய்வு வாதம் (Osteoarthiritis of knee) ஆகியவற்றுக்கு இஞ்சி நல்ல பலன் கொடுக்கும் எனத் தெரிகிறது.

சரி எவ்வளவு இஞ்சி சாப்பிட்டால் பலன் கிடைக்கும்? பெரும்பாலான ஆய்வுகள் 250 மி.கி. முதல் 1 கிராம் அளவிலான காய வைத்து தூள் செய்யப்பட்ட இஞ்சியை கூட்டுக் குளிசையாக தினமும் ஒன்று முதல் நான்கு தடவைகள் கொடுத்தே செய்யப்பட்டன. பக்கவிளைவுகள் கிடையாதா என்பது சிலரது சந்தேகம். நெஞ்செரிவு, வாய் எரிவு, வயிற்றோட்டம் போன்ற பக்க விளைவுகள் சிலருக்கு ஏற்படலாம். ஆயினும் குருதி உறைதல் தொடர்பான பக்க விளைவு வோபெரின் (Warfarin) உபயோகிக்கும் நோயாளர்களுக்கு பிரச்சனை ஆகலாம். அத்தகையவர்கள் அதிகமாக இஞ்சி உட்கொண்டால் இரத்தப் பரிசோதனை செய்து பார்ப்பது உசிதமானது.

இஞ்சிக் கிழங்கு உண்மையில் சரிந்த பாட்டில் கிடக்கும் தண்டாகும். இதிலிருந்து வேர் கீழ் நோக்கி வளர்கிறது. இது ஆசியா போன்ற உலர் வலய நாடுகளில் வளரும் தாவரம். மருத்துவக் குணங்கள் உள்ள போதும் அமெரிக்க அரசின் உணவு மற்றும் மருந்துகளுக்கான திணைக்களம் இஞ்சியை உணவுத் தயாரிப்பில் உபயோகப்படுத்தும் பொருளாகவே வகைப்படுத்துகிறதே அன்றி மருந்தாக அல்ல.

## Health benefits of Ginger

Ginger root has been in use since ancient times for its anti-inflammatory, carminative, anti-flatulent, and anti-microbial properties. Total antioxidant strength measured in terms of oxygen radical absorbance capacity (ORAC) of ginger root is 14,840 µmol TE/100 g.

It contains health benefiting essential oils such as gingerol, zingerone, shogaol, farnesene, and small amounts of ß-phelladrene, cineol, and citral. Gingerols help improve the intestinal motility and have been anti-inflammatory, painkiller (analgesic), nerve soothing, antipyretic as well as anti-bacterial properties. Studies have shown that it may decrease nausea induced by motion sickness or pregnancy and may help relieve a migraine headache.

Studies suggest that zingerone, a chemical compound which gives pungent character to the ginger root, is effective against E.coli induced diarrhea, especially in children.


This herb root only has 80 calories per 100 g and contains no cholesterol. Nonetheless, it composes many essential nutrients and vitamins such as pyridoxine (vitamin B-6), pantothenic acid (vitamin B-5) that required for optimum health.

Furthermore, it also holds a good amount of minerals like potassium, manganese, copper, and magnesium. Potassium is an important component of cell and body fluids that helps controlling heart rate and blood pressure.■


OIL CHANGE SPECIAL $19.95
+ Tax & Disposal Fees
Semi-Synthetic Oil Change includes:
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
2nd Location
GRAND OPENING
MY MECHANIC
MY MECHANIC AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca


Babu Florist Ltd.
6055 Steeles Ave, Unit C114, Scarborough, Ontario. M1X 0A7
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
www.babuflorist.com
Email : info@babuflorist.com


BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


துன்புறுத்தலுக்கு எந்தவிதமான மன்னிப்பும் கிடையாது
காயப்பட்டிருக்கிறீர்கள்
அவமானப்பட்டிருக்கிறீர்கள்
அச்சுறுத்தப்பட்டிருக்கிறீர்கள்
மிரட்டப்பட்டிருக்கிறீர்கள்
நாங்கள் உதவிசெய்ய முடியும்
இலவசமான மற்றும் இரகசியமான சேவை
பாதுகாப்புத் திட்டமிடல் . கவுன்சலிங் . குடியிருப்பு வசதி . சட்டரீதியான சேவைகள் . நிதிரீதியான ஆதரவுகள் . வேலைதேடல் உதவி . சிறுவர்களுக்கான சேவைகள் . குடிவரவு
நீங்கள் தனித்தில்லை . உதவிக்கு எங்களை அழையுங்கள்
ஸ்காபோரோவில் வெவ்வேறு அமைவிடங்கள்
(416) 216-4623
contact@cwomenss.ca
www.cwomenss.ca
CWSS
Connecting Women with Scarborough Services
நாங்கள் பல்வேறு மொழிகளில் பேசுகிறோம்
MakeWay
United Way Greater Toronto
Canada

ISSN 1206-0585

